பக்கங்கள்: எட்டு

# உதயன்

விலை ரூபா 6.00

சுடர் 11 வள்ளுவர் ஆண்டு 2027 புரட்டாதி 21 திங்கட்கிழமை (07-10-1996) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 233

# ஆயுதங்கள் முழுவதையும் புலிகள் கையளித்தால் மட்டுமே பேச்சு!

## அமைச்சர் அனுருத்த அறிவிப்பு

கொழும்பு. ஒக். 7

விடுதலைப் புலிகளுடன் அரசு பேச்சு நடத்துவதாயின் அவர்கள் முழு ஆயுதங்களையும் கையளிக்க வேண்டும் — இவ்வாறு பாதுகாப்பு பிரதி அமைச்சர் ஜெனரல் அனுருத்த ரத்வத்தை திட்டவட்டமாகத் தெரிவித்திருப்பதாக கொழும்பிலிருந்து ஒலிபரப்பாகும் 'யெஸ். எவ். எம்.' வானொலி நேற்று அறிவித்தது.

ஒரு குறிப்பிட்ட காலவரையறைக்குள் பேச்சு நடத்தி முடிவு காண்பதற்கு புலிகள் இணங்க வேண்டியதும் ஒரு முன்நிபந்தனையாகும் என்று அமைச்சர் ரத்வத்தை சொன்னார்.

எத்தகைய பேச்சுகளாயினும் அதில் ஜனநாயக வழிக்குத் திரும்பியுள்ள சகல தமிழ்க் கட்சிகளுக்கும் இடமளிக்கப்படுவதும் அவசியம் என்று அமைச்சர் மேலும் கூறியதாக 'யெஸ். எவ். எம்.' குறிப்பிட்டது.

பேச்சுக்கள் இடம் பெறுவதாயின் — ஆயுதங்களை வைக்காமல் — முன்நிபந்தனை ஏதுமின்றியே அவை இடம் பெற வேண்டும் என விடுதலைப் புலிகள் வற்புறுத்தி வருவதாக யெஸ். எவ். எம்.' சுட்டிக்காட்டியது.

இதற்கிடையில் சில தினங்களுக்கு முன்னர் அரசு சார்பு பத்திரிகைகளில் ஆசிரியர்களைச் சந்தித்த ஜெனரல் ரத்வத்தை —

''விடுதலைப்புலிகளோடு பேசுவதற்கு நாம் இப்போது தயாராக இல்லை ஜனாதிபதி விதித்திருக்கும் நிபந்

(8 ஆம் பக்கம் பார்க்க)

# பாதுகாப்பு ஏற்பாடு கொழும்பில் தீவிரம்!

## புலிகளின் தற்கொலைப் படையினர் ஊடுருவியிருப்பதாகச் சந்தேகம்

கொழும்பு, ஒக்ரோபர் 07

**கொழும்பு நகரில் பாதுகாப்பு ஏற்பாடுகள் மிகத் தீவிரமாக்கப்பட்டுள்ளன. படையினர் உச்ச விழிப்பு நிலையில் வைக்கப்பட்டுள்ளனர் — என்று ஏஜென்சி செய்திகள் தெரிவித்தன.**

விடுதலைப் புலிகளின் தற்கொலைப் படையைச்சேர்ந்த 25 பெண்கள் கொழும்பு நகருக்குள் ஊடுருவியுள்ளதாகவும்—

நகரின் பல இடங்களில் குண்டுத் தாக்குதல்களை நடத்துவதற்குத் திட்டமிட்டிருப்பதாகவும்—

தகவல்கள் கிடைத்திருப்பதை அடுத்தே தீவிர பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக—மேலும் தெரிவிக்கப்பட்டது.

( 8ஆம் பக்கம் பார்க்க)

### அரசு, புலிகள் இருசாராரிடமும்

# மிதிவெடிகளைப் பயன்படுத்துவதை தவிர்க்க செஞ். குழு கோரிக்கை

கொழும்பு, ஒக். 7

''போரில் அனைத்து வகை நிலக்கண்ணி வெடிகளையும் பயன்படுத்துவதை மனிதாபிமான அடிப்படையில் அடியோடு தவிர்க்க முன்வாருங்கள்!''

—இவ்வாறு செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் தலைமைப்] பிரதிநிதி பிற்றர் ஜான்ட் ஸ்ரீலங்கா அரசுக்கும், தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்துக்கும் பகிரங்க வேண்டுகோள் ஒன்றை விடுத்திருப்பதாகக் கொழும்புச் செய்திகள் தெரிவித்தன.

நிலக்கண்ணி வெடிகளை உலகிலிருந்து அகற்றுவது தொடர்பான சர்வதேச மாநாடு ஒன்று கடந்த வாரம் கனடா தலைநகர் ஒட்டாவாவில் முடிவடைந்த பின்னர் இந்த அறிவிப்பை செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு பிரதிநிதி விடுத்திருப்பது குறிப்பிடத்தக்கது.

மனிதருக்கு எதிராக நிலக்கண்ணிகளைப் புதைப்பதை — மனித நேயத்தின் அடிப்படையில் — கருத்துடன்பாடு கண்டு, அடியோடு தவிர்ப்பதற்கு அரசு, புலிகள் ஆகிய இருதரப்பும் முன்வர வேண்டும் என்று செஞ்சிலுவைப் பிரதிநிதி கோரினார்.

வருடம் தோறும் உலகில்—ஆட்களுக்கு எதிரான மிதிவெடிகள் மற்றும் கண்ணிவெடிகளால் — 25 ஆயிரம் பேர் இறக்கின்றனர்; அல்லது ஊனமடைகின்றனர் என ஐ. நா. புள்ளி விபரம் ஒன்று கூறுகின்றது.

மிதிவெடிகளை உலகிலிருந்து முற்றாக அகற்றவும்,

(8 ஆம் பக்கம் பார்க்க)

# இ.தொ.காவும் கூட்டணியும் புலிகளுடன் பேச வேண்டும்

## அரசியல் வட்டாரங்களில் கருத்து

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கு விடுதலைப் புலிகளுடன் பேச்சு நடத்தியே ஆக வேண்டும் என இலங்கை தொழிலாளர் காங்கிரஸும், தமிழர் விடுதலைக் கூட்டணியும் தொடர்ந்து வலியுறுத்தி வருவதால் —

இந்த இருகட்சிகளும் புலிகளுடன் தாங்களே பேச்சு நடத்தி, இனப்பிரச்சினைக்குத் தீர்வாக உரிய திட்டம் ஒன்றை முன்வைக்க வேண்டிய காலம் வந்துவிட்டது.

அத்தகைய திட்டத்தை, அதிகாரப் பரவலாக்கல் தொடர்பான அரசமைப்பு சீர்திருத்தங்களை ஆராய்ந்து வரும் நாடாளுமன்றத் தெரிவுக் குழுவிடமோ, அல்லது அரசு உயர் மட்டத்திலோ அக்கட்சிகள் முன்வைக்கலாம்.

(7 ஆம் பக்கம் பார்க்க)

# அமைச்சரவையில் விரைவில் மாற்றம்!

## டக்ளஸுக்கும் மந்திரிப் பதவி?

கொழும்பு, ஒக். 7

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க விரைவில் தமது அமைச்சரவையில் பெரிய மாற்றங்களைச் செய்யவிருக்கின்றார்.

கொழும்புச் செய்திகள் இவ்வாறு தகவல் வெளியிட்டன.

நாடாளுமன்றத்தில் ஒன்பது உறுப்பினர்களைக் கொண்ட ஈ. பி. டி. பியின் செயலாளர் நாயகமான டக்ளஸ் தேவானந்தாவுக்கு ஓர் அமைச்சர் பதவியை வழங்க ஜனாதிபதி முன்வந்திருக்கின்றார்.

ஆனால் அந்த அழைப்பை தேவானந்தா சாதகமாகப் பரிசீலித்து அமைச்சர் பத

(7 ஆம் பக்கம் பார்க்க)

மற்றொரு செய்தி 4 ஆம் பக்கத்தில்

ஈ பி. டி. பி. செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தாவும் ஓர் அமைச்சராக நியமிக்கப்படக்கூடும்.

# வலையிறவுப் பாலத்தில் கண்ணிவெடித் தாக்கு!

## போக்குவரத்து தடைப்பட்டது

மட்டக்களப்பு சத்துருக்கொண்டான் முகாமிலிருந்து வவுணதீவு முகாமுக்கு பஸ்ஸில் சென்றுகொண்டிருந்த படையினர் மீது நேற்று முன்தினம் வலையிறவுப் பாலத்தில் வைத்து விடுதலைப் புலிகள் கண்ணிவெடித் தாக்குதல் ஒன்றை நடத்தியதாக அறிவிக்கப்படுகின்றது

இதனால் இராணுவ அதிகாரி ஒருவரும், 14 படையினரும் காயமடைந்தனர்.

பஸ்ஸை செலுத்தி வந்த சிவிலியன் சாரதியும் காயமுற்றார்.

இத் தாக்குதலினால் வலையிறவுப் பாலம் சேதமுற்றதை அடுத்து மட்டக்களப்புக்கும், ஏனைய பகுதிகளுக்குமான போக்குவரத்துப் பாதிக்கப்பட்டிருக்கின்றது. (உ-3)

### வடக்கு, கிழக்கைச் சேர்ந்த

# ஐம்பது தமிழ்ப் பொலீஸார் குடாநாட்டில் பணிக்கு!

திருகோணமலை, ஒக். 7

வடக்கு - கிழக்குப் பகுதிகளிலிருந்து புதிதாகச் சேவைக்குத் திரட்டப்பட்ட ஐம்பது பொலீஸார் காங்கேசன்துறைக்கு அனுப்பி வைக்கப்பட்டிருப்பதாக பொலீஸ் மா அதிபர் டபிள்யூ பி. ராஜகுரு தெரிவித்திருக்கின்றார்.

இவர்கள் குடாநாட்டில் திறக்கப்பட்டுள்ள பொலீஸ் நிலையங்களில் பணிபுரிவதற்கு அனுப்பி வைக்கப்படுவர் என்றும் —

அங்கு இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களில் மேலும் பல புதிய பொலீஸ் நிலையங்கள் திறக்கப்படும் என்றும் —

அவர் மேலும் தெரிவித்தார். (உ-150)

## கிளிநொச்சியில் சிப்பாய் பலி!

கிளிநொச்சி மாவட்டத்தில் புதிதாக அரச படைகள் கைப்பற்றியுள்ள பகுதியில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் ஒன்றில் இராணுவச் சிப்பாய் ஒருவர் பலியானார்.

கிளிநொச்சியின் தென்பகுதியில் வெள்ளிக்கிழமை மாலை 7 மணியளவில் புலிகள் இந்தத் தாக்குதலை நடத்தியதாக அறிவிக்கப்பட்டது.

# பிரத்தியேக வகுப்புகள்

நக்கா வீதி, யாழ்ப்பாணம்.
(புனித ஜோண் பொஸ்கோ பாடசாலை முன்பாக)
யாழ். முன்னணி ஆசிரியர் குழு

## A/L 97, 98

பொருளியல்:— திரு. இராஜேஸ்வரன், திரு. விக்கி
வர்த்தகம்:— திரு. பாஸ்கரன்
கணக்கியல்:— திரு. சுதர்ஷன்
புள்ளி விவரவியல்:— யாழ். பிரபல ஆசிரியர்
அரசியல்:— திரு. பஞ்சு

(ஏனைய பாடங்களும் ஆரம்பிக்கப்படும்)
ஆரம்பம்:— **09–10–96**
பிற்பகல் **3** மணி

## கணக்கியல்

## A/L 97

வங்கி கணக்கிணக்கக் கூற்று
ஆரம்பம்:— **09–10–1996**
பிற்பகல் **4** மணி

குறிப்பு:— புதிய பாடத்திட்டப்படி முழுப் பாடத்திட்டமும் பூர்த்தியாக்கப்படும்.

(43060)


## துறவற வாழ்வின்
# வெள்ளி விழா

செபமாலைக் கன்னியர் சபையைச் சேர்ந்த
## அருட்சகோதரி பிறிட்ஜெட்

தமது துறவற வாழ்வின் 25 வருட திருப்பணியை **07-10-1996** இல் நிறைவு செய்கிறார்.

அவரது துறவுப் பணி மேலும் துலங்க ஆண்டவரைப் பிரார்த்திப்பதோடு, இத்தகவலை எமது உறவினர்களுக்குத் தெரியத்தருகிறேன்,

தகவல்;
ஆ. இம்மனுவேல்
(சகோதரன்)

சில்லாலை வடக்கு,
பண்டத்தரிப்பு.

(43071)

# 31-ம் நாள் நினைவஞ்சலி

மலர்வு: 09 – 08 – 1977



உதிர்வு: 07 – 09 – 1996

## செல்வி ஞானந்தி கணநாதன்

பரீட்சையில் சித்தி பெற்று
பல்கலை வாசல் செல்ல
''அதிர்ஷ்டம் உனக்கு''
உண்டாகவென — உன்
மலர் முகம் பார்த்து
வாழ்த்தினேனே !
மறுநாள்......
மரண வாசலில்
வாடி வீழ்வாயென
யார்தான் நினைத்தனர்?

அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எனது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்வதுடன் அவரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றேன்.

ஓம் சாந்தி ! சாந்தி !! சாந்தி !!!

செல்வி சுகிர்தா தெய்வேந்திரன்
[பல்கலைக்கழக மாணவி]

(43072)

# கண்ணீர் அஞ்சலி

## அமரர் செல்லையா நடராசா
(இளைப்பாறிய பொலிஸ் அலுவலர்)

நுணாவில் கிழக்கு சர்வசாதன சங்க சனசமூக நிலையத்தின் தலைவராகத் திகழ்ந்த அமரர் செ. நடராசா அவர்களின் மறைவையிட்டு துயருறும் அவர் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

சர்வசாதன சங்க சனசமூக
நிலைய நிர்வாகத்தினர்.

நுணாவில் கிழக்கு,
சாவகச்சேரி.

(சி/3249)

# சமய சந்நிதிகளில்

அருள்மிகு ஸ்ரீ இலஞ்சியாரணியம் மண்டுவில் அம்மன் ஆலயத்தில் (சோலை அம்மன்) இன்று காலை 6-30 மணி முதல் ஏகதின இலட்சார்ச்சனையும், விசேட திரவ்ய ஹோமமும் நடைபெறும்.

(அ-3)

## பதுளையில் குண்டு

கொழும்பு, ஒக். 7

பதுளை மாவட்டத்தில் இரண்டு பெரும் குண்டுகளை கடந்த திங்கட்கிழமை பதுளைப் பொலிஸார் கண்டு பிடித்ததாக அறிவிக்கப்பட்டுள்ளது.

பதுளையில் நல்தென என்ற பகுதியில் வைக்கோல் குவியலுக்குள் இருந்து ஒரு குண்டையும்—

இந்துருவெவ என்ற இடத்தில் உள்ள தேயிலைப் புதருக்குள் இருந்து மற்றொரு குண்டையும்—

பொலீஸார் கைப்பற்றினர்.

(உ-3)

## விவசாயிகள் ஒய்வூதியம்

யாழ்ப்பாணம், ஒக். 7

யாழ். மாவட்டத்தில் விவசாய ஒய்வூதியத்திட்டத்தின் கீழ் ஒய்வூதியம் பெறும் விவசாயிகளுக்கான செப்டெம்பர் மாத ஒய்வூதியம் இன்று நல்லூர் முத்திரைச்சந்தி கமத் தொழில் காப்புறுதிச் சபை மாவட்ட காரியாலயத்தில் வைத்து வழங்கப்படவிருக்கிறது.

(உ-3)

## இன்று ஆரம்பம்

யாழ் உயர் தொழில் நுட்பக்கல்வி நிறுவனத்தின் விரிவுரைகள் கோப்பாய் அரசினர் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் இன்று ஆரம்பமாகவிருப்பதாக நிறுவனத்தின் இணைப்பாளர் தெரிவித்தார்

(இ-4)

## தென்மராட்சி ஒய்வூதியர் வவுச்சர்கள்

தென்மராட்சி, ஒக்.7

தென்மராட்சிப் பிரதேசத்தில் நிரந்தரமாக வதியும் ஒய்வூதியர்களின் ஒக்ரோபர் மாத வவுச்சர்கள் இன்று திங்கட்கிழமை பிரதேச செயலக ஒய்வூதியப் பகுதியினரால் தபாலில் சேர்க்கப்படவுள்ளன.

சாவகச்சேரி, கொடிகாமம், கைதடி ஆகிய கிராமிய வங்கிகளில் ஒய்வூதியம் பெறுபவர்களின் வவுச்சர்களும், பட்டியல்களும் அந்தந்த கிராமிய வங்கிகளுக்கும், ஏனைய வங்கிகளில் ஒய்வூதியம் பெறுபவர்களின் வவுச்சர்கள் தபாலிலும் இன்று சேர்க்கப்படும்.

(அ-117)

## திருத்தப்படும் 'தியாக சீலம்'

வலி- தென் மேற்கு, ஒக். 7

சுமார் ஓராண்டு காலமாக கவனிக்கப்படாமல் கிடந்த மானிப்பாய் 'தியாக சீலம்' சிறுவர் பூங்கா தற்போது சீர் திருத்தம் செய்யப்படுகின்றது.

மானிப்பாய் பிரதேசசபையினர் இத்திருத்த வேலைகளை மேற்கொள்வதாகத் தெரிவிக்கப்பட்டது.

(உ-145)

## விநியோகம்

யாழ்ப்பாணம், ஒக். 7

ஆட்பதிவுத் திணைக்களத்தினால் வழங்கப்படும் விசேட அடையாள அட்டைக்கான புகைப்படங்கள், யாழ். பல்கலைக்கழகத்தில் பிடித்தவர்களுக்கான புகைப்படங்கள் சிரேஷ்ட மாணவர் ஆலோசகர் காரியாலயத்தில் வைத்து வழங்கப்படுவதாக பதிவாளர் தெரிவித்துள்ளார்.

(உ-3)

# மரண அறிவித்தல்கள்

## சின்னத்தம்பி வல்லிபுரம்
(நந்தாவில் அம்மன் கோயிலடி)

கொக்குவில் கிழக்கு, நந்தாவில் அம்மன் கோயிலடியைச் சேர்ந்த சின்னத்தம்பி வல்லிபுரம் அவர்கள் நேற்று (6-10-96) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற திருமதி பாக்கியம், இராசா (நோர்வே) ஆகியோரின் அருமைச் சகோதரரும், பரமேஸ்வரியின் அன்புக் கணவரும், வசந்தரூபி (ஜேர்மனி), உதயகுமாரி (கனடா), மோகனரூபி, சுவர்ணரூபி, காந்தரூபன் (கனடா), ஞானரூபி (கனடா), பிரேமரூபன் [கனடா], யோகரூபி (ஜேர்மனி) ஆகியோரின் பாசமிகு தந்தையும், இரத்தினமகேசன் (ஜேர்மனி), யோகராஜா (கனடா), பாக்கியநாதன் (இணுவில்), குமாரசாமி [இணுவில்], றஞ்சினிதேவி [கனடா], லோகநாதன் [கனடா], அகிலன் [ஜெர்மனி] ஆகியோரின் அன்பு மாமனாரும், ஜலனன், ஜனனி, ஜலரூபன், அனோஜா, சிந்துஜா, தனுஜா, கஜானா, இரஜீவி, தர்ஷன், ராகவன், சுயந்தன், பிரதீப், பிரசன்னா, சகானா, அபிஷேக் ஆகியோரின் அருமைப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (7-10-96) திங்கட்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக காலை 11.00 மணியளவில் தாவடி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

தகவல்:
திருமதி பரமேஸ்வரி வல்லிபுரம்
(மனைவி)

கோயில் வீதி,
கொக்குவில்.

(43065)

## செல்வி சிவாஜினி சிவகுமாரன்

காங்கேசன்துறை கருகம்பனையைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், தற்போது கோப்பாய் V. C. லேனை வசிப்பிடமாகக் கொண்ட செல்வி சிவாஜினி சிவகுமாரன் 6 – 10 – 1996 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் சிவகுமாரன் — நிர்மலாதேவி தம்பதிகளின் அன்புப் புதல்வியும், செந்தூரன், செந்தீபன், லக்ஷியா ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்றவர்களான செல்லத்துரை, தம்பி, மற்றும் தெய்வானைப்பிள்ளை சின்னத்தங்கம் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 6 – 10 – 1996 ஞாயிறு நண்பகல் கோப்பாயில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் இருபாலை இந்து மயானத்தில் தகனம் செய்யப்பட்டது. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத் தருகின்றோம்.

தகவல்;
செ சிவகுமாரன்
(தகப்பன்)

V. C. ஒழுங்கை,
கோப்பாய் தெற்கு,
கோப்பாய்.

(43061)

## ஆறுமுகம் கதிரவேலு
(புகையிலை வியாபாரி)

கொடிகாமம், மீசாலை வடக்கைச் சேர்ந்த ஆறுமுகம் கதிரவேலு காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற ஆறுமுகம் - சின்னப்பிள்ளை தம்பதிகளின் மகனும், வள்ளிப்பிள்ளையின் அன்புக் கணவரும், செல்லப்பா, சின்னாச்சிப்பிள்ளை, தெய்வானைப்பிள்ளை ஆகியோரின் சகோதரனும், நாகம்மா, ஆறுமுகம், முருகேசு ஆகியோரின் அன்பு மைத்துனரும், செல்லமுத்து, சாரதாதேவி, இந்திராணி, சிவராசா, யோகராசா ஆகியோரின் அன்புக் தந்தையும், சிவநாதன், சிவனேசம், நாகராசா, நாகேஸ்வரி ஆகியோரின் அன்பு மாமனாரும், ரஞ்சினி, நிறஞ்சினி, நிரோசன், டயானா, கசீலன், ஜலசா, லக்ஸன் ஆகியோரின் பேரனுமாவர்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 06-10-96 ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றன. இத் தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல் :
திருமதி முருகேசு (கனகம்மா)
(சகோதரி)

மீசாலை வடக்கு,
கொடிகாமம்.

(சி/3247)

## கார்த்திகேசு கந்தையா
(இளைப்பாறிய அதிபர்)

மாதகலை பிறப்பிடமாக கொண்ட கார்த்திகேசு கந்தையா 5- 10- 96 அன்று கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற மேரிப்பிள்ளையின் அன்புக் கணவரும், விஜயநாதன் (ஆஸ்திரேலியா), ஜெயபாலன் (அமெரிக்கா), ஞானேந்திரன் (கொழும்பு), திலகானந்தன் (கொழும்பு), சத்தியபாமா ஆகியோரின் பாசமிகு தந்தையாரும, சீதா, நளினி, விக்கினேஸ்வரி, நவரஞ்சிதம், ஆறுமுகராஜா ஆகியோரின் அன்பு மாமனாரும், பிரபாகரன், பிரியாந்தி, Dr. சூர்யா, Dr. மஞ்சுளா, ஜெயந்தன், சுகந்தன், மகிந்தன், வித்தியா, சௌமியா, சரணியா, கிரிதரன், கிரிசாந்தன், தனராஜ் ஆகியோரின் அருமைப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நேற்று (6- 10-96) பிற்பகல் 4 45 மணிக்கு கொழும்பில் நடைபெற்றன.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகிறோம்.

தகவல்:
திருமதி திலகானந்தன்
(மருமகள்)

30/1 வைமன் வீதி,
நல்லூர்,
யாழ்ப்பாணம்.

(43068)

# புலிகளுடன் பேசுவது குறித்து ஜனாதிபதி திடீரென அறிவித்ததன் பின்னணி என்ன?

ஆயுதக் கையளிப்பு இல்லாமலேயே சர்வதேச மத்தியஸ்தத்துடன் புலிகளோடு பேச்சுவார்த்தை நடத்த அரசு தயார் என்று ஜனாதிபதிசந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க தெரிவித்திருக்கிறார்.

சென்னையில் இருந்து வெளிவரும்''புரண்ட் லைன்'' (Front Line) என்ற பிரபல ஆங்கில இதழுக்கு அளித்த பேட்டியிலேயே ஜனாதிபதி இதைத் தெரிவித்திருக்கிறார்.

இது வெறும் 'கப்சாவா'? அல்லது ஜனாதிபதி உண்மையிலேயே புலிகளுடன் பேசுவதில் அக்கறை கொண்டுள்ளாரா — என்ற கேள்விகள் சில வட்டாரங்களில் எழுப்பப்படுகின்றன.

புலிகளுடன் பேச்சு வார்த்தைக்கான கதவுகள் எப்பொழுதும் திறந்து இருக்கின்றன என்று முன்னர் பல தடவைகளில் ஜனாதிபதி கூறியிருக்கிறார். அப்போதெல்லாம் பேச்சுவார்த்தைக்கு நிபந்தனைகள் விதிக்கப்பட்டன. முக்கிய நிபந்தனை புலிகள் ஆயுதங்களைக் கையளித்து விட்டு பேச்சுவார்த்தைக்கு வரவேண்டும் என்பதாகும்.

இப்போது அந்த நிபந்தனை இல்லாமலும் மூன்றாம் தரப்பு அதாவது சர்வதேச மத்தியஸ்தத்துடன் பேச்சு வார்த்தை நடத்த அரசாங்கம் தயாராக இருக்கிறது என்று ஜனாதிபதி தெரிவித்திருக்கிறார்.

அரசாங்கம் பதவிக்கு வந்த ஆரம்ப காலத்தில் அரசுக்கும் புலிகளுக்குமிடையே யாழ்ப்பாணத்தில் பேச்சுவார்த்தை நடந்தபோது பிரான்ஸ் நாட்டுக்காரர் ஒருவரை மத்தியஸ்தத்துக்குஅழைக்க ஜனாதிபதி விரும்பினார்.

ஆனால் அதற்குப் புலிகள் இணங்கவில்லை. பிரான்ஸ் நாட்டுக்காரர் ஜனாதிபதிக்கு வேண்டியவர் என்றும் அவர் நடுநிலையாகப் பணியாற்றுவார் என்று தாம் கருதவில்லை என்றும் கூறியே அவரைப் புலிகள் வேண்டாம் என்றனர்.

அதற்குப் பின்னர் சர்வதேச மத்தியஸ்தம் வேண்டாம் என்ற நிலைக்கு வந்து விட்டார்ஜனாதிபதி.''தமிழர் பிரச்சினை உள்நாட்டுப் பிரச்சினை. அதை நாங்களே தீர்த்துக் கொள்வோம். இதில் வெளிநாட்டவர்களின் தலையீடு தேவையில்லை'' என்றே ஜனாதிபதி கூறிவந்தார்.

மொத்தத்தில் தமிழர் பிரச்சினையை — அதாவது இனப் பிரச்சினையை — சர்வதேச விவகாரமாக்க ஜனாதிபதி விரும்பவில்லை.

தமிழீழ விடுதலைப் புலிகள் கூட ஐ.நா. மத்தியஸ்தம் மற்றும் சர்வதேச நிறுவனங்களின் மத்தியஸ்தம் இருந்தால் பேச்சுவார்த்தை நடத்தலாம் என்று தெரிவித்தார்கள்; எதுவும் நடக்கவில்லை.

இப்போது ஜனாதிபதியே சர்வதேச மத்தியஸ்தத்துடன் அதுவும் ஆயுதக் கையளிப்பு நிபந்தனை இல்லாமலே பேச்சுவார்த்தை நடத்தலாம் என்று கூறிவிட்டார்.

இதிலிருந்து எப்படியும் பேச்சுவார்த்தை நடத்த வேண்டும் என்பதில் ஜனாதிபதி அக்கறை கொண்டுள்ளார் என்று ஊகிக்க முடிகிறது.

புலிகள் இயக்கத்தை அரசாங்கம் இன்னும் தடை செய்யாமல் இருப்பது மேற்படி ஊகத்துக்கு வலுவூட்டுகிறது.

புலிகள் இயக்கம் இந்தியாவில் தடைசெய்யப்பட்டு இருக்கிறது. மற்றும் சில வெளிநாடுகள் புலிகள் இயக்கத்தின் செயற்பாடுகளைத் தத்தமது நாடுகளில் கட்டுப்படுத்தியுள்ளன.

இலங்கையில் இன்னும் அப்படி எதுவும் இல்லை புலிகள் இயக்கத்தைத் தடைசெய்வது பற்றிச் சமீபத்தில் அரசாங்கம் தீவிரமாக ஆலோசித்தது. கடைசியில் எதுவும் செய்யவில்லை. பேச்சுவார்த்தை நடத்துவதற்கு வசதியாகத் தான் புலிகள் இயக்கம் தடைசெய்யப்படாமல் இருக்கிறது என்று அரசாங்க வட்டாரங்களில் கூறப்படுகிறது.

பேச்சுவார்த்தை நடக்கும்; யுத்தம் நின்று விடும் என்ற எண்ணத்தை ஏற்படுத்தும் தகவல் ஒன்றையும்ஜனாதிபதி சமீபத்தில் தெரிவித்தார்.

> புலிகளுடன் பேசுவது பற்றிய அரசின் திடீர் அறிவிப்பு வெளியான தன் பின்னணி குறித்து கடந்த வார'சூடாமணி' பத்திரிகையின ''காண்டீபம்'' அரசியல் விமர்சனக் கட்டுரையில் தெரிவிக்கப்பட்ட கருத்துக்கள் இவை.

அடுத்த வரவு செலவுத் திட்டத்தில் பாதுகாப்புச் செலவுத் தொகை குறைக்கப்படும் என்று ஜனாதிபதி தெரிவித்தார். அடுத்த வருடத்தில் பாதுகாப்புச் செலவு 5ஆயிரம் கோடி ரூபாவாக அதிகரித்து விடும் என்று முன்னர் நிதிக்குப் பொறுப்பான பிரதி அமைச்சர் பீரிஸும் ஜனாதிபதியும் கூடக் கூறிவந்தார்கள்.

இப்போது திடீரென்று வரவு செலவுத் திட்டத்தில் பாதுகாப்புக்கான நிதி ஒதுக்கீடு குறைக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது.

பாதுகாப்புப் படையினரின் தேவைக்கு இனிப் புதிதாக ஆயுதங்கள் வாங்கத் தேவையில்லை. அதனால் பாதுகாப்பு நிதி அதிகம் தேவை இல்லை என்றும் ஜனாதிபதி தெரிவித்திருக்கிறார்.

இவையெல்லாம் பேச்சுவார்த்தையில் அரசாங்கம் அக்கறை கொண்டிருக்கிறது என்பதையே காட்டுகின்றன என்று அரசியல் விமர்சகர்கள் கூறுகிறார்கள்.

அது உண்மையானால் அரசாங்கம் இப்போது ஏன் புதிதாகப் பேச்சுவார்த்தையில் இவ்வளவு அக்கறை கொண்டிருக்கிறது என்பது கேள்வி.

அதற்கு முக்கியமாக மூன்று காரணங்கள் கூறப்படுகின்றன.

ஒன்று — சர்வதேச சமூகமும் உதவி வழங்கும் நாடுகளும் கடன் வழங்கும் உலக நிறுவனங்களும் கொடுக்கும் அழுத்தம்.

இரண்டு — வடக்கு கிழக்கில் இன்று எழுந்துள்ள நிலை.

மூன்று — சீர்குலைந்து வரும் நாட்டின் பொருளாதாரம்.

உலக நிதி நிறுவனங்களும் இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளும் இனப் பிரச்சினை தொடர்பாக அரசாங்கம் தெரிவித்து வரும் கருத்துக்களை முற்று முழுதாக நம்பவில்லை. அவை வேறு வழிகளிலும் உண்மை நிலைமையை அறிந்து கொள்ளும் முயற்சியில் ஈடுபட்டுள்ளன.

அரசாங்கத்தின் வருமானத்தில் பெரும் பகுதி யுத்தத்திற்குச் செலவானால் அபிவிருத்திப் பணிகளுக்கும் மற்றும் தேவைகளுக்கும் பணம் பற்றாக்குறையாக.இருக்கும் அப்போது உலக வங்கி, சர்வதேச நாணய நிதியம் ஆசிய அபிவிருத்தி வங்கி, உதவிவழங்கும் நாடுகள் ஆகியவற்றிடம் இலங்கை நிதி உதவி கேட்டுக் கை நீட்டும். அவை வருடா வருடம் தொடர்ந்து கொடுத்துக் கொண்டு இருக்குமா?

தவிரவும் தாம் வழங்கும் உதவிப் பணம் வருமானத்தைத் தரக் கூடிய விதத்தில் தொழில் துறைகளிலும் அபிவிருத்திப் பணிகளிலும் பயன்படுத்தப்படுகிறதா என்பதை உதவி நிறுவனங்களும் நாடுகளும் கவனிக்கும். ஊழியர்களுக்குச் சம்பளம் கொடுப்பதற்கும் வெளிநாட்டுப் பொருள்களை இறக்குமதி செய்வதற்கும் மானியம்வழங்குவதற்குமா அவை இலங்கைக்குக் கடன் கொடுக்கும்?

*அழுத்தம்*

ஆகவே யுத்தம் நிறுத்தப்பட வேண்டும். பிரச்சினை தீர்க்கப்பட வேண்டும்.

நாட்டில் வழமை நிலை ஏற்படுத்தப்பட வேண்டும் என்று அவை அரசுக்கு அழுத்தம் கொடுக்கத் தொடங்கி விட்டன.

சர்வதேச சமூகமும் யுத்தத்துக்கு எதிராகவே நிற்கிறது. அதன் கருத்துக்கு மதிப்பளிக்காமல் நடந்தால் உலகில் இலங்கையின் 'இமேஜ்'



விழுந்துவிடும்.

இரண்டாவதாக வடக்கு-கிழக்கின் இன்றைய நிலை அரசாங்கத்துக்குப் பெரும் தலையிடியாக இருக்கிறது.

*கிழக்கில்*

கிழக்கில் பெரும்பாலும் நகரப் பகுதிகளிலேயே பாதுகாப்புப் படையினர் நிலை கொண்டுள்ளனர் நகரங்களின் எல்லைகளுக்கு அப்பால் புலிகள் எங்கும் நடமாடிக் கொண்டிருக்கிறார்கள். அங்கிருந்து நகரங்களில் அவ்வப்போது வழி மறித்தாக்குதல் சம்பவங்களில் ஈடுபடுகிறார்கள்; கட்டுப்படுத்த முடியாத நிலை

*வடக்கில்*

வடக்கில் இராணுவக் கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளை விடப் புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளே அதிகம்.

யாழ். குடாநாட்டைப் பாதுகாப்புப் படைகள் கைப்பற்றி விட்டதாகக் கூறப்பட்ட போதிலும் பல பகுதிகளில் புலிகள் தமது ஆணையைச் செலுத்துகிறார்கள். அந்தப் பகுதிகள் ''அன்கிளியேட் ஏரியாஸ்'' (Uncleared Areas) என்று கூறப்படுகின்றன. அதாவது புலிகளை அப்புறப்படுத்தி துப்புரவு செய்யப்படாத பகுதிகள் என்று அர்த்தம்.

யாழ். நகர் உட்படத் துப்புரவு செய்யப்பட்ட பகுதிகள் என்று கூறப்படும் பகுதிகளில் கூடப் புலிகள் அவ்வப்போது பாதுகாப்புப் படையினர் மீது சிறு தாக்குதல்களை நடத்துகிறார்கள்.

*தற்கொலைத் தாக்குதல்*

உதாரணத்துக்கு யாழ்நகர் சென்ற வீடமைப்புநிர்மாணத் துறை அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வாவைக் குறி வைத்துத் தற்கொலைப் போராளி விளைவித்த அனர்த்தத்தைக் குறிப்பிடலாம்.

துப்புரவாக்கப்பட்ட பகுதிகளில் பல்லாயிரக்கணக்கான துருப்பினரை வைத்திருந்தும் அங்கு அமைதி காக்க முடியவில்லை. துப்புரவு செய்யப்படாத பகுதிகளையும் துப்புரவு செய்து கண்காணிப்பதானால் இப்போது வடக்கில் நிலை கொண்டுள்ள படையினரைப் போல் இன்னும் பல மடங்கினர் தேவை, அதற்கு ஆட்கள் இல்லை.

*மக்கள் நிலை*

இனி யாழ்ப்பாணத்துக்குத் திம்பிச் சென்ற மக்களின் நிலையும் எதிர்பார்த்த அளவுக்கு இல்லை.

உணவுப் பொருள்கள் வேண்டிய அளவில் இல்லை அதனால் விலை அதிகம் ஆஸ்பத்திரி முன்னர் போல் இயங்கவில்லை. மீன்பிடி விவசாயத் தொழில்கள் விழுந்தவை விழுந்தவைதான் இன்னும் எழும்பவில்லை.

எல்லைப் பகுதிகளுக்கும் மின்சார விநியோகம் இன்னும் இல்லை ரெலிபோன் வசதியும் இல்லை புனரமைப்பு வேலைகள் குறிப்பிடத்தக்க அளவில் இல்லை.

எதற்கு எடுத்தாலும் பாஸ் வீதிகள் பலவற்றில் சாணுக்கும்முழத்துக்கும் சோதனைச் சாவடிகள், விரும்பிய படி எங்கும் நடமாட முடியாது. பஸ் சேவை குறைவு துப்புரவு செய்யப்பட்ட பகுதியில் உள்ள ஒருவர் துப்பரவு செய்யப்படாத பகுதிக்குச் செல்வதற்கு அனுமதி பெற வேண்டும். மாலை 6 மணிக்குப் பின் எவரும் வீடுகளை விட்டு வெளியே வருவதில்லை; தாங்கள் புலிகள் என்று சந்தேகிக்கப்பட்டு கைது செய்யப்படலாம் அல்லது சுட்டுக் கொல்லப்படலாம் என்ற அச்சம்.

*அச்சம்*

பல இடங்களில் இராணுவ அத்துமீறல் சம்பவங்கள், ஆட்கள் காணாமல் போதல் முதலான சம்பவங்களும் அறிவிக்கப்பட்டுள்ளன.

மொத்தத்தில் யாழ் திரும்பிய மக்கள் அடுத்து என்ன நடக்குமோ, மீண்டும் இடம் பெயர்ந்து செல்ல வேண்டிய அவலம் ஏற்படுமோ என்ற அச்சத்துடன் இருக்கிறார்கள்.

சுதந்திரக் காற்றைச் சுவாசிக்க அவர்கள் விரும்புகிறார்கள்.

வெட்கத்தாலும் துக்கத்தாலும் எதையும் வாய் திறந்து சொல்லக் கூச்சப்படுகிறார்கள்.

இது அரசுக்குத் தெரியும். இப்படி யாழ் மக்களின் மனதை வெல்ல முடியாது என்பதையும் அரசு அறியும்.

யாழ் மக்கள் மட்டுமன்றி வன்னிப் பெரு நிலப்பரப்பில் உள்ள கிளிநொச்சிப் பகுதி மக்களும் இன்று பெரும் கஷ்டங்களை அனுபவித்து வருகிறார்கள்.

*முல்லைத்தீவு தாக்குதல்*

முல்லைத்தீவு இராணுவ முகாமைப் புலிகள் தாக்கி நிர்மூலமாக்கி விட்டார்கள். படையினர் நூற்றுக்கு அதிகமானோரைக் கொன்றதோடு முகாமில் இருந்த பெருந்தொகையான சக்தி வாய்ந்த ஆயுதங்களையும் எடுத்துச் சென்றுவிட்டார்கள்.

அந்தப் படுவீழ்ச்சியிலிருந்து மீண்டு படையினருக்குப் புதுத்தெம்பு ஊட்டுதற்காக ஆனையிறவிலிருந்து கிளிநொச்சியை நோக்கித் தாக்குதல் நடத்தினால் அதுவும் எதிர்பார்த்த பலனை இது வரை தரவில்லை. கிளிநொச்சி நகரம் அழிந்ததும் மக்கள் நடமாட்டமின்றி வெறிச்சோடியதும் தான் மிச்சம்.

*அரசின் சிந்தனை*

இந்த நிலையில் தொடர்ந்து போராடுவதும் மக்களின் வெறுப்புக்கு இலக்காவதும் புத்தியா?

இந்தச் சிந்தனையும் அரசைப் பேச்சுவார்த்தைக்குத் தூண்டியிருக்கிறது" என்று அரசியல் விமர்சகர்கள் கூறுகிறார்கள்.

மூன்றாவதாக நாட்டின் பொருளாதாரச் சீர்குலைவும் அரசை நிலைமாறச் செய்திருக்கிறது.

போர்ச்சூழ்நிலை காரணமாக வெளிநாட்டவர்கள் இலங்கையில் மூலதனமிட்டு தொழில்களைத் தொடங்கத் தயங்குகிறார்கள்.

இந்த நாட்டுத் தனியார் துறையினரும் கூட முதலீடு செய்ய மனமில்லாதவர்களாவே இருக்கிறார்கள்.

இவற்றால் பொருள் உற்பத்தி குறைவதோடு ஏற்றுமதி வருமானமும் வீழ்ச்சி அடைகின்றது. வேலையில்லாத் திண்டாட்டம் அதிகரித்து வருகிறது.

வெளிநாட்டு உல்லாசப் பயணிகள் வருகையும் குறைந்து விட்டது.

கொழும்பில் கூடக் குண்டு வெடிப்பு என்றால் உல்லாசப் பிரயாணிகள் இங்கு வர விரும்புவார்களா?

இந்தப் பின்னணியில் தான் யார் எதிர்த்தாலும் சரி, வரவேற்றாலும் சரி புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தி இனப்பிரச்சினைச்கு எல்லோரும் ஏற்றுக் கொள்ளக்கூடிய நிரந்தர அரசியல் தீர்வு காண்பது என்ற நிலைக்கு அரசு வந்திருக்கிறது அதன் வெளிப்பாடுதான் ஆயுதக் கையளிப்பு இல்லாமல் மூன்றாவது சக்தியின் மத்தியஸ்தத்துடன் புலிகளுடன் பேச்சு நடத்த அரசு தயார் என்ற ஜனாதிபதியின் அறிவிப்பு என்று அரசியல் விமர்சகர்கள் சுட்டிக் காட்டுகிறார்கள்.

✶

## பட்டதாரி ஆசிரியர் சங்கம் அரசுக்கு எச்சரிக்கை

ஜி சீ.ஈ உயர்தரப் பரீட்சை விடைத்தாள்கள் திருத்துவது தொடர்பாக அரசுக்கும் ஒன்றிணைந்த பட்டதாரி ஆசிரியர்களின் சங்கத்துக்கும் இடையில் ஏற்பட்ட உடன்பாட்டின் போது தெரிவிக்கப்பட்ட வாக்குறுதிகளை அப்படியே அரசு நிறைவேற்றும் என தாம் நம்புவதாக ஒன்றிணைந்த பட்டதாரி ஆசிரியர்கள் சங்கத்தின் செயலாளர் சிசிரகுமாரா நேற்றுப் பத்திரிகையாளர் மாநாட்டில் தெரிவித்தார்.

அரசாங்கம் அளித்துள்ள வாக்குறுதிகளை நிறைவேற்றாது விடின் தமது சங்கம் மீண்டும் தொழிற்சங்க நடவடிக்கையில் இறங்க நேரிடும் என அவர் தெரிவித்தார்.

பட்டதாரி ஆசிரியர்கள் சங்கத்தின் கோரிக்கைகளை ஏற்ற அரசு அவற்றை 19997 ஜனவரி 1ஆம் திகதிக்குள் நிறைவேற்றுவதாக உறுதி அளித்துள்ளது.

தமது கோரிக்கைகளை நிறைவேற்ற அரசு அடுத்த ஜனவரி 1 ஆம் திகதிவரை காத்திராமல் ஆசிரியர் தினமான ஒக்ரோபர் 6 ஆம் திகதி அன்று நிறைவேற்றுமாயின் அது அரசுக்கு நல்ல பயனை அளிக்கும் என சிசிரகுமார மேலும் தெரிவித்தார்.

# இரண்டு வாரங்களுக்குப் போதுமான மருந்து வகைகள் மட்டுமே உண்டு

## கிளிநொச்சி, முல்லை. மாவட்டங்களில்

கொழும்பு, ஒக். 7

கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் போதிய மருந்து வகைகள் இல்லை. அதனால் வைத்திய சேவை பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது.

இப்பகுதிகளுக்கு அதிக அளவிலும், அவசரமாகவும் தேவைப்படும் — மலேரியா நோயினால் பாதிக்கப்படுவோருக்குக் கொடுக்கப்படும் குளோரகுவின் குளிகைகளுக்கும், காய்ச்சல், வயிற்றோட்டம் போன்ற நோய்களுக்குக் கொடுக்கப்படும் ''அன்ரிபயற்றிக்'' குளிகைகளுக்கும் —

பெரும் தட்டுப்பாடு உண்டாகியுள்ளது இவை வெகு வேகமாகத் தீர்ந்து வருகின்றன.

பொதுவாகவே, இப்போது கையிருப்பில் உள்ள மருந்து வகைகள் ஆகக்கூடியது இன்னும் இரண்டு வாரங்களுக்கு மட்டுமே போதும்.

இந்த இரண்டு மாவட்டங்களுக்கும் வழமையாகத் தேவைப்படும் மருந்து வகைகளில் இருபத்தைந்து சதவீதத்தை மட்டுமே எடுத்துச் செல்வதற்குப் பாதுகாப்பு அமைச்சு அனுமதி வழங்குகிறது.

இதேவேளை அவசர சிகிச்சைகளுக்குத் தேவைப்படும் இரத்தப்பிரிவை இனங்காணும் கருவி மற்றும் பல மருததுவக் கருவிகள் இந்த இரண்டு மாவட்டங்களிலும் அறவே இல்லை. —

இத்தகவல்களை எம். எஸ் எவ் மருத்துவ சேவை அமைப்பின் இலங்கைக் கிளைப் பணிப்பாளர் டாக்டர் கிலோமோர் யேட்டோலொட்டி தெரிவித்தார்.

(அ - 3)

## வடக்கிற்கு விரைவில் ஐந்து புதிய பஸ்கள்

திருகோணமலை, ஒக். 7

அடுத்த இரண்டு மாத காலத்துக்குள் வடபிராந்திய போக்குவரத்துச் சபைக்கு மேலும் ஐந்து புதிய பஸ்கள் அனுப்பி வைக்கப்படும் என போக்குவரத்து அமைச்சு வட்டாரங்கள் கொழும்பில் தெரிவித்தன.

வடக்கில் போக்குவரத்துச் சேவையில் பஸ்களை ஈடுபடுத்த விரும்புவோருக்கு வங்கிகள் மூலம் இலகு கடன் அடிப்படையில் பஸ்களை வழங்கும் திட்டம் ஒன்றும் அங்கீகரிக்கப்பட்டிருப்பதாகக் கொழும்புச் செய்திகள் தெரிவித்தன. (உ - 150)

## யாழ். பாடசாலைகளுக்குரிய ஆய்வுகூடப் பொருள்களை அனுப்பி வைக்க முயற்சி

திருகோணமலை, ஒக். 7

யாழ். மாவட்டப் பாடசாலைகளுக்குத் தேவையான விஞ்ஞான ஆய்வு கூட உபகரணங்களையும், இரசாயனப் பொருள்களையும் அனுப்பி வைப்பதற்கான அனுமதியை வழங்குமாறு வடக்கு—கிழக்கு மாகாண கல்வி அமைச்சு, கொழும்பு மத்திய கல்வி அமைச்சின் ஊடாக பாதுகாப்பு அமைச்சுக்கு விண்ணப்பித்திருக்கிறது.

கடந்த ஐந்து வருட காலமாக யாழ் மாவட்டப் பாடசாலைகளுக்கு விஞ்ஞான ஆய்வு கூட உபகரணங்களோ, இரசாயனப் பொருள்களோ வழங்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (உ - 150)


காரைநகர்

பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்

(வரையுள்ளது)

### பதவி வெற்றிடம்

கணக்காளர் பதவி 104/10

தகமைகள்:-

அ) கூட்டுறவு ஊழியர் 11 ஆவது சம்பளத்திட்டத்தில் கணக்குப் புத்தகங்கள் பேணுதல் அல்லது கணக்கு வைத்தல் கணக்காய்வாளர் வேலையில் (3) மூன்று வருடத்திற்குக் குறையாத அனுபவம் அல்லது 12 ஆவது சம்பளத் திட்டத்தில் கணக்குப் புத்தகம் பேணுதல், கணக்கு ஆய்வாளர் வேலையில் (ஆறு) 6வருட அனுபவம்.

அல்லது

ஆ) ஐக்கிய இராச்சியத்தில் கணக்குப் புத்தகங்கள் பேணுதல், பரீட்சை இறுதித் தேர்வு சித்தி அடைந்து ஓர் வியாபார நிறுவனம் / கைத்தொழில் நிறுவனத்தில் கணக்கு புத்தகங்கள் பேணுதல்/ கணக்காய்வாளர் சேவையில் மேற்பார்வை மட்டத்திலான (2) இரண்டு வருடத்திற்கு குறையாத அனுபவம் அல்லது ஐக்கிய இராச்சியத்தில் கணக்குப் புத்தகங்கள் பேணுதல், இடைநிலைத் தேர்வில் சித்தியுடன் ஓர் வியாபார நிறுவனம் / கைத்தொழில் நிறுவனத்தில் கணக்குப் புத்தகங்கள் பேணுதல், கணக்காய்வாளர் வேலையில் மேற்பார்வை மட்டத்தில் நான்கு (4) ஆண்டுகளுக்கு குறையாத அனுபவம்.

அல்லது

இ) கூட்டுறவு ஊழியர் (உயர்தரம்) சான்றிதழ் அல்லது க. பொ. த (உயர்தரம்) சான்றிதழ் பரீட்சையில் கணக்கியல் பாடம் உட்படமூன்று (3) பாடங்களில் சித்தியுடன் ஓர் வியாபாரநிறுவனம் அல்லதுகைத்தொழில்நிறுவனத்திலகணக்குப் புத்தகங்கள் பேணுதல் கணக்காய்வாளர் வேலையில் மேற்பார்வை மட்டத்தில் நான்கு (4) ஆண்டுகளுக்கு குறையாத அனுபவம்.

சம்பளத்திட்டம்:-

1.305 — 2.005
40இல 5—50இல் 10

இத்துடன் அங்கீகரிக்கப்பட்ட சகல படிகளும் வழங்கப்படும்.

வயதெல்லை:-

25—45 வரை கூட்டுறவுச் சங்க பணியாளர்களுக்கு வயதெல்லை கணிக்கப்பட மாட்டாது. சங்கப் பணியாளர்கள் விண்ணப்பங்களை தங்கள் சங்க நிர்வாகத்தினூடாக அனுப்பப்படல் வேண்டும்.

பிணைகள்:-

கூட்டுறவு வேலையாளர் ஆணைக்குழு பிரமானத் திற்கமைய செலுத்தப்படல் வேண்டும்

பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் 30—10—96 ஆம்திகதி அன்றோ அல்லது அதற்கு முன்னராக எமக்கு கிடைக்கக் கூடியவாறு ''தலைவர், காரைநகர், பல. நோக்குக் கூட்டுறவுச் சங்கம், காரைநகர்'' என்ற முகவரிக்கு பதிவுத்தபால் மூலமாக அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

தலைவர்.

(43057)


## வடக்கில் கைதான 80 பேர் விளக்க மறியலில்

யாழ்ப்பாணம், ஒக். 7

யாழ் மாவட்டத்தில் விடுதலைப் புலிகள் சந்தேகநபர்கள் என்ற பெயரில் கைது செய்யப்பட்ட 80பேர் அண்மையில் அனுராதபுரம் மாஜிஸ்திரேட் முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்டனர்.

அவர்களை எதிர்வரும் 11 ஆம் திகதிவரை விளக்க மறியலில் வைக்குமாறு மாஜிஸ்திரேட் எம். எஸ். என். எல். டீ. கொஸ்ரா உத்தரவிட்டார். (உ)

## கொழும்பில் மீண்டும் விசாரணைகள்

கொழும்பு ஒக். 7

வடக்கு, கிழக்கு மாகாணத்தில் காணாமல் போனோர், கடத்தப்பட்டோர் சம்பந்தமான ஜனாதிபதி ஆணைக் குழுவின் விசாரணைகள் மீண்டும் எதிர்வரும் 12 ஆம்திகதி தொடக்கம் 19 ஆம் திகதி வரை கொழும்பில் நடைபெறவுள்ளன.

சுமார் 750 முறைப்பாடுகள் விசாரணைக்காக எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன.

ஆணைக்குழுவின் தலைவராக ஓய்வு பெற்ற நீதியரசர் கே. பாலகிட்ணர் கடமையாற்றுகின்றார். ஏனைய உறுப்பினர்களாக எஸ். டபிள்யூ. வைத்தியரத்தின, கலாநிதி டபிள்யூ. என். வில்சன் ஆகியோர் பணிபுரிகின்றனர். (உ)

## சைக்கிள் திருட்டு

யாழ்ப்பாணம், ஒக். 7

யாழ். போதனா வைத்தியசாலை ஊழியர்களுக்கான சைக்கிள் பாதுகாப்பு நிலையத்தில் ஊழியரால் வைக்கப்பட்ட சைக்கிள் ஒன்று திருட்டுப் போயிருப்பதாகத் தெரியவருகின்றது.

பெண் ஊழியர் ஒருவரே கடந்த வாரம் இவ்வாறு தமது சைக்கிளை இழந்தார். (உ)

# டக்ளஸுக்கு அமைச்சர் பதவி?

கொழும்பு, ஒக். 7

ஈ.பி.டி.பி. தலைவர் டக்ளஸ் தேவானந்தா அமைச்சர் பொறுப்பொன்றை ஏற்றுக்கொள்ளலாம் என அரசியல் வட்டாரங்களை மேற்கோள்காட்டி ''தினகரன்'' பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

அரசாங்க உயர்மட்டம் திரு. டக்ளஸ் தேவானந்தாவிடம் அமைச்சர் பொறுப்பை ஏற்கும்படி கேட்டுக்கொண்டதாகத் தெரியவருகின்றது.

ஆயினும் திரு தேவானந்தா இன்னும் அரசாங்கத்துக்கு உறுதி மொழி எதனையும் வழங்கவில்லை எனக் கூறப்பட்டது.

அரசின் இந்த அழைப்பை ஈ.பி.டி.பி. நன்றாகப் பரிசீலித்து வருகின்றது என தமிழ்க்கட்சி வட்டாரம் ஒன்று தெரிவித்தது.

இது தொடர்பாக திரு: டக்ளஸ் தேவானந்தாவுடன் தொலைபேசி மூலம் கருத்துக் கேட்ட போது —

''இதனைப் பற்றி எதுவித கருத்தும் கூறமுடியாது'' — என்று தெரிவித்து நேரடியாகப் பதிலளிப்பதை அவர் தவிர்த்துக் கொண்டார்.

— இவ்வாறு அந்தப் பத்திரிகைச் செய்தி மேலும் தெரி

(8 ஆம் பக்கம் பார்க்க)

## பாரிய புனர்வாழ்வுப் பணி வடக்கில் நடக்கிறதாம்

### ஜெனரல் அனுரத்த தகவல்

''யுத்தத்தினால் சின்னாபின்னப்பட்டிருக்கும் வடபிராந்தியத்தை மீண்டும் கட்டி எழுப்புவதற்கான பாரிய புனர்நிர்மானத் திட்டத்தை அரசாங்கம் முன் எடுத்துச் செல்கிறது''

— பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் ஜெனரல் அனுருத்த ரத்வத்தை வடபகுதியின் தற்போதைய நிலைமை பற்றி கொழும்பில் வெளிநாட்டுச் செய்தியாளர்களுக்கு விளக்கிக் கூறும்போது இவ்வாறு தெரிவித்தார் என இலங்கை வானொலி அறிவித்தது.

தரைமார்க்கமான போக்குவரத்தில் உள்ள கஷ்டங்கள் காரணமாக வடபகுதிக்கு கட்டடப் பொருள்களையும், உணவுப் பொருள்களையும் விநியோகிப்பதில் தடங்கல்கள் எதிர்நோக்கப்படுவதாகவும் அமைச்சர் கூறினார்.

கடந்த வாரம் இராணுவத்தினர் கிளிநொச்சி நகரைக் கைப்பற்றியதை அடுத்து குடிமக்கள் வாழும் பிரதேசங்களை புலிகள் இழந்துள்ளனர் என்றும் அவர் கூறினார்.

(உ - 3)


யாழ் கனகரத்தினம்

மத்திய மகா வித்தியாலயம்

ஆசிரியர் தின விழா-ஒக்ரோபர் 06

### சேவை நலன் பாராட்டல்

மேற்படி விழா 07 - 10 - 1996 கல்லூரி பிரதான மண்டபத்தில் நடைபெறும்.

அதிபர், ஆசிரியர்கள் சேவையைப் பாராட்டி அவர்களின் சேவை என்றும் ஒளிமயமாய் விளங்க வாழ்த்துகின்றோம்.

பாடசாலை அபிவிருத்திச் சங்கம்,
பழையமாணவர் சங்கம்,
மாணவர்கள்.

(43058)

### ஆசிரியர் தினம்

யா\ மல்லாகம் மகா வித்தியாலயம்

07—10—1996

மாணவர்களின் எதிர்கால உயர்விற்காக அதிபருடன் இணைந்து நற்சேவையாற்றுகின்ற எமது மதிப்பிற்கு மேலான ஆசிரியர்களை உள்ளன்போடு நன்றி பாராட்டி வளமுடன் வாழ வாழ்த்துகின்றோம்.

''அறிவொளி அகிலம் எங்கும் பரவுக''

பாடசாலை மாணவர்கள்,
பெற்றோர்கள்.

(43048)

### தேசிய கல்வி நிறுவனம்

யாழ். இந்துக் கல்லூரி நிலையம்

கல்வி வலயம் - 1 இனைச் சேர்ந்த பாடசாலைகளில் கற்பிக்கும் பட்டதாரி ஆசிரியர்கள் பட்டப்பின் கல்வி டிப்புளோமா — 1996/97 கற்கை நெறிக்கான விண்ணப்பங்களைத் தமது Bio - Data வுடன் சிரேஷ்ட விரிவுரையாளருக்கு அனுப்பி வைக்கவும்.

கல்விப் பணிப்பாளர்

7-10-96. (43059)

# ஆப்கானின் தலிபான் இயக்கத்துடன் பாகிஸ்தானுக்கு தொடர்பில்லையாம்!

## பிரதமர் பெனாஸிர் பூட்டோ அறிவிப்பு

இஸ்லாமாபாத், ஒக். 7

ஆப்கானிஸ்தான் தலைநகர் காபூலைக் கைப்பற்றியிருக்கும் தலிபான் இயக்கத்துக்கும் தமது நாட்டுக்கும் எந்தவிதத் தொடர்பும் இல்லை என்று பாகிஸ்தான் பிரதமர் பெனாஸிர் பூட்டோ தெரிவித்துள்ளார்.

தலிபான் இயக்கத்தின் பின்னணியில் பாகிஸ்தான் இருக்கிறது அல்லது அந்த இயக்கத்துக்கு உதவி செய்கிறது என்ற தவறான எண்ணம் ரஷ்யாவிடம் இருக்குமானால் அதை நீக்கிவிடவேண்டும் என்று சி. என். என். தொலைக் காட்சிக்கு அளித்த பேட்டியில் பெனாஸிர் பூட்டோ தெரிவித்தார்.

தீவிரவாத பிரிவினைச் சக்திகளை பாகிஸ்தான் எப்போதுமே எதிர்த்து வந்துள்ளது; ஜனநாயகத்தை ஆதரித்து வந்துள்ளது; சர்வாதிகாரத்துக்கு எதிராகப் போராடியுள்ளது— என்றும் அவர் தெரிவித்தார்.

பாகிஸ்தானின் மறைமுக ஆதரவுடனேயே தலிபான் இயக்கம் பலமாக வளர்ந்து வருவதாக முன்னர் செய்திகள் வெளியாகியிருந்தது குறிப்பிடத்தக்கது.

பாகிஸ்தானில் உள்ள பெரும்பான்மை முஸ்லிம்களும், தலிபான் குழுவினரும் 'சுனி' முஸ்லிம் பிரிவைச் சேர்ந்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

(உ-3)

# வேகத் துடுப்பாட்டத்தில் பாக். வீரர் உலக சாதனை

நைரோபி, ஒக். 7

கடந்த வெள்ளியன்று ஸ்ரீலங்கா அணிக்கும், பாகிஸ்தான் அணிக்குமிடையே கென்யாவில் நடைபெற்ற ஒருநாள் கிரிக்கட் போட்டியில் பாகிஸ்தான் அணியைச் சேர்ந்த சாஹிட் பிறீடி 37 பந்துகளில் 100 ஓட்டங்களைப் பெற்று புதிய உலக சாதனையை நிலைநாட்டினார். இவர் எடுத்த 102 ஓட்டங்களில் 11 ஸிக்ஸர்களும் 6 பவுண்டரிகளும் அடங்கியுள்ளன.

ஸ்ரீலங்கா அணி வீரர் சனத் ஜெயசூரியா 48பந்துகளில் 100 ஓட்டங்களைப் பெற்றதே முன்னைய உலக சாதனையாக இருந்துவந்தது. 16 பந்துகளில் 50 ஓட்டங்களைப் பெற்று சனத் ஜெயசூரியா மற்றுமொரு சாதனையை நிலைநாட்டியிருந்தார்.

கடந்த வெள்ளியன்று நடைபெற்ற ஆட்டத்தின்போது சாஹிட் பிறீடி தனது முதல் 50 ஓட்டங்களை 17 பந்துகளிலேயே பெற்றார். இதனால் இவரால் சனத் ஜெயசூரியாவின் வேகமாக 50 ஓட்டங்களைப் பெற்ற சாதனையை முறியடிக்க முடியவில்லை. வேகமாக நூறு ஓட்டங்களைப் பெறுவதிலேயே சாதனை நிலைநாட்ட முடிந்தது.

(உ-10)

# ராவைப் பாதுகாக்கும் முயற்சியில் ஈடுபடவில்லை

## பிரதமர் தேவகௌடா கூறுகிறார்

புதுடில்லி, ஒக். 7

வழக்குகளில் சம்பந்தப்பட்டுள்ள முன்னாள் பிரதமர் பி. வி. நரசிம்மராவைப் பாதுகாக்க தாம் எந்த முயற்சியும் செய்யவில்லை என்று பிரதமர் தேவகௌடா கூறியுள்ளார்.

வழக்கு முழுவதும் நீதித்துறை அதிகாரிகளிடமும், குற்றப் புலனாய்வுத் துறையிடமும் விடப்பட்டுள்ளது. எந்தவொரு வழக்கிலும் குறுக்கிடுவது என்ற பேச்சே கிடையாது என்று உறுதியாகக் கூறினார் தேவகௌடா.

உத்தரப் பிரதேசத்தில் தேர்தல் பிரசாரத்தை முடித்துக் கொண்டு திரும்புகையில் விமானத்தில் பி. ரி. ஐ. செய்தியாளரிடம் அவர் பேசுகையில் இதனைத் தெரிவித்தார்.

நரசிம்மராவுடன் தாம் இரகசிய உடன்பாடு செய்து கொண்டிருப்பதாக கூறப்படுவது ஆதாரமற்றது என்றார் அவர்.

லகுபாய் பதக் வழக்கில் நரசிம்மராவ் நீதிமன்றத்தில் சமுகமளிக்க வேண்டிய தினத்திற்கு முதல்நாள் அவரை தாம் சந்தித்தது பற்றி குறிப்பிட்ட தேவகௌடா, அரசியல் வாதிகளுக்கு எதிரான குற்றச்சாட்டுக்கள் நீதிமன்றத்தில் முடிந்த முடிவாக நிரூபிக்கப்படாத வரை அவரை சந்திப்பதில் தவறேதும் இல்லை என்று தெரிவித்தார்.

தலைமை நீதிபதியை தாம் சந்தித்தது, ஒரு பதில் நடவடிக்கையே என்றும் அவர் சொன்னார்.

(உ-3)

# காபூலின் பின் பன்செர் பள்ளத்தாக்கில் தலிபான் – தஜிக் படைகள் கடுஞ்சமர்!

காபூல், ஒக். 7

காபூலைக் கைப்பற்றி ஆப்கானிஸ்தானில் ஆட்சியமைத்துள்ள இஸ்லாமிய கடும் போக்கு தலிபான் இராணுவ குழுவுக்கும், இனச் சார்பு தஜிக் கெரில்லாக் குழுவுக்கும் இடையில் பன்செர் பள்ளத்தாக்கில் கடும் சண்டை நடைபெறுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த வாரம் எதிர்பாராத தாக்குதல் ஒன்றை நடத்தி தலைநகர் காபூலை தலிபான் இராணுவக்குழு கைப்பற்றியதையடுத்து, தஜிக் கெரில்லாக்குழு பன்செர் பள்ளத்தாக்கில் நிலைகொண்டிருந்தது.

தலிபான் படைகளால் விரட்டப்பட்ட அரசின் பாதுகாப்பு அமைச்சராக இருந்த அகமட் ஷா மசூட் என்பவரைத் தலைவராகக்கொண்ட இந்த தஜிக் கெரில்லாக்கள் குழு, அப்போது பிரதமராக இருந்த ரபானியின் ஆதரவுப் படையாகும்.

சோவியத் யூனியனின் ஆதரவுடன் நஜிபுல்லா ஆட்சியமைத்த காலத்தில் கூட பன்செர் பள்ளத்தாக்கு தஜிக் கெரில்லாக்கள் வசமேயிருந்தது. அச்சமயம் நடந்த கடும் தாக்குதல்களின்போது கூட இந்தப்பகுதியை நஜிபுல்லாவின் படைகளால் கைப்பற்ற முடியவில்லை. அந்தப்பகுதியில்தான் இப்போது கடும் சண்டை மூண்டுள்ளது.

## உலக அரங்கில்

ஹெலிக்கொப்டர்கள் மூலமும் தாக்குதல் நடைபெறுவதாகத் தெரிவிக்கப்பட்டது.

இந்தப்பகுதிக்குச் செல்லும் பாதைகள் அனைத்தையும் தஜிக் கெரில்லாக்கள் மூடியுள்ளனர்.

அதேவேளை —

காபூலின் எல்லைப் பகுதியில் அமைந்துள்ள சோவியத் குடியரசு நாடுகளான ரஷ்யா, தஜுகிஸ்தான் ஆகியன தமது எல்லைப் பகுதியில் படைகளை குவித்து உஷார் நிலையில் வைத்துள்ளன.

தமது எல்லையை சண்டை நெருங்குமானால் தாம் பதிலடி கொடுக்க வேண்டிய நிலை ஏற்படும் என்றும்—

ஆப்கானுக்குள் சண்டை நடந்தால் தாம் அதில் தலையிடமாட்டோம் என்றும் —

அந்த நாடுகள் அறிவித்துள்ளன.

(உ-3)

# காஷ்மீர் விவகாரம்: பாகிஸ்தான் யோசனையை அமெரிக்கா நிராகரித்தது

வாஷிங்டன், ஒக். 7

காஷ்மீர் பிரச்சினைக்குத் தீர்வுகாண சர்வதேச மாநாடு ஒன்றை நடத்த வேண்டும் என்ற பாகிஸ்தானின் யோசனையை அமெரிக்கா நிராகரித்து விட்டதாக அறிவிக்கப்படுகின்றது.

பாகிஸ்தான் பிரதமர் பெனஸிர் பூட்டோ தெரித்த — சர்வதேச மாநாடு பற்றிய — யோசனையை அமெரிக்க வெளியுறவுத் துறைத் தொடர்பாளர் நிக்கலஸ் பேர்ண்ஸ் நிராகரித்ததுடன் இந்தப் பிரச்சினை இரு நாடுகள் சம்பந்தப்பட்ட பரஸ்பரப் பிரச்சினையாக இருப்பதால் பிரச்சினையுடன் தொடர்புடைய நாடுகளின் தலைவர்கள் இது பற்றி நேரடியாக பேச்சுக்களை நடத்தி தீர்வுகாண வேண்டும் என்று குறிப்பிட்டார்.

1994 ஆம் ஆண்டுக்கு பின்னர் நிறுத்தி வைக்கப்பட்டுள்ள இந்திய — பாகிஸ்தான் பேச்சுவார்த்தைகளை மீண்டும்தொடங்கும்படி அமெரிக்கா ஆலோசனை கூறியுள்ளதாகவும் அவர்சொன்னார்.

காஷ்மீர் பிரச்சினையை சர்வதேச மயப்படுத்துவதை கடுமையாக எதிர்த்து வரும் இந்தியா இருதரப்புப் பேச்சுக்கள் மூலம் தீர்வு காண்பதையே வலியுறுத்தி வருகின்றது என்பது குறிப்பிடத்தக்கது (உ-3)

# சிங்கத்துக்கு இருதய அறுவை சிகிச்சை

ஜொகனர்ஸ் பேர்க், ஒக். 6

தென் ஆபிரிக்காவின் பிரிட்டோரியாவில் உள்ள மிருகக் காட்சிச் சாலையில் வெள்ளை நிறச் சிங்கம் ஒன்றுக்கு நேற்று முன்தினம் இருதய அறுவைச் சிகிச்சை நடைபெற்றது.

4 மணி நேரம் நடைபெற்ற இந்த ஆறுவைச் சிகிச்சை முழுவெற்றி என மருத்துவர்கள் தெரிவித்தனர். (இ-10)

# விஷச்சாராயம் குடித்த 13 பேர் தமிழகத்தில் பலி

புதுக்கோட்டை அருகே கோவில்பட்டி கிராமத்தில் நேற்று முன்தினம் இரவு விஷச்சாராயம் அருந்தியவர்களில் 13 பேர் இறந்துள்ளனர்.

விஷச்சாராயம் அருந்தியதால் பாதிக்கப்பட்ட 58 பேர் புதுக்கோட்டை ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

இவர்களின் ஆபத்தான நிலையில் இருந்த 6 பேர் தஞ்சாவூர் மருத்துவ மனைக்கு மாற்றப்பட்டுள்ளனர்.

வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டவர்களில் 7 பேரின் நிலைகவலைக்கிடமாக உள்ளது.

விஷச்சாராயத்தை உற்பத்தி செய்தவர் கைதாகியுள்ளார்.

இது குறித்த விசாரணையின் பின்னர் திருக்கோகரணம் பொலீஸ் நிலையத்தைச் சேர்ந்த காவற்துறை ஆய்வாளர், உதவி ஆய்வாளர், தலைமைக் காவலர், மற்றும் காவலர்கள் பலர் தற்காலிகமாக வேலை நீக்கம் செய்யப்பட்டுள்ளனர். (அ-3)

# அனைவருக்கும் உளநலம் - 07

## அன்பு - வாழ்வின் உயிர்நிலை

- ★ அன்பு — ஆரோக்கியமான மனதின் பண்பும் தேவையும் ஆகும்.
- ★ கள்ளமில்லாத திறந்த மனமே, அன்பு எனும் நெடுஞ்சாலையின் பெருவாயில் ஆகும்.
- ★ அன்பு என்பது தன்னுள் பிறந்து, அயல் சுற்றம், தாவரம் விலங்கு, தன் தேசம், பிரபஞ்சம் என வியாபித்து, அந்த முழுமையின் கூறாய் நின்று தன்னில் அடங்குதல் ஆகும்.
- ★ அன்பே அனைத்திற்கும் மூலசக்தி; அன்பினூடேதான் மானுடம் வென்று நிற்கும்.

AHC

# ஊர்காவற்றுறை, புங்குடுதீவிலிருந்து கால்நடைகளை எடுத்துவரத் தடை

நெடுந்தீவு ஒக். 7

ஊர்காவற்றுறை, புங்குடுதீவு ஆகிய இடங்களில் இருந்து யாழ். நகருக்கு கால்நடைகளைக் கொண்டு வருவது தடை செய்யப்பட்டுள்ளது.

இப் பகுதிகளில் இடம் பெயர்ந்தவர்கள் பலர் இன்னும் மீளக் குடியேறாதபடியாலேயே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இந்தப் பகுதியில் இடம் பெயர்ந்தவர்களின் ஆடு, மாடுகளைச் சிலர் திருட்டுத்தனமாகப் பிடித்து யாழ். நகருக்குக் கொண்டு சென்று இறைச்சிக்கு விற்கும் மோசடிகள் குறித்து தெரிவிக்கப்பட்ட முறைப்பாடுகளை அடுத்தே இந்தத் தடை விதிக்கப்பட்டதாகக் கூறப்படுகிறது.

அதே சமயம் நெடுந் தீவில் இருந்து கால்நடைகளை யாழ். நகருக்கு கொண்டு வருவதற்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

நெடுந்தீவு உதவி அரசாங்க அதிபரிடம் பெறும் அநுமதிப் பத்திரத்தை அல்லைப்பிட்டியில் உள்ள இராணுவ முகாமில் காட்டி கால்நடைகளை யாழ். நகருக்கு கொண்டு வர முடியும் என்று தெரிவிக்கப்படுகிறது.

வன்னிப் பகுதியில் இருந்து குடாநாட்டுக்கு இறைச்சிக்காக கால்நடைகள் எடுத்து வரப்படுவது தடைப்பட்டதால், யாழ். நகரப் பகுதியில் இறைச்சிக்குத் தட்டுப்பாடு நிலவுவது தெரிந்ததே.

(இ-111)

# நவாலி வடக்குப் பகுதியில் கூட்டுறவுக்கடை இல்லை

வலி- தென் மேற்குஒக். 7

நவாலி - வடக்கில் கூட்டுறவுச் சங்கக்கிளைகள் எவையும் தற்போது இயங்கவில்லை. இதனால் மக்கள் நீண்ட தூரம் சென்று வேறு பகுதி சங்கக் கிளைகளில் பொருள்களை பெற்றுவருகின்றனர்.

முன்னர் இப்பகுதியில் செயற்பட்ட 9 ஆம், 7 ஆம் இலக்கக் கிளைகள் தற்போது செயற்படவில்லை.

இதனால் நிவாரணம் மற்றும் பொருள்களை மக்கள் பெற்றுவருவதில் கஷ்டமடைகின்றனர்.

(இ-145)

# சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

நல்ல நிலையில் உள்ள சாளி மோட்டார் சைக்கிளும், பலசரக்கு கடைக்குத் தேவையான மரத்தளபாட சாமான்களும் விற்பனைக்கு உண்டு தொடர்பு: இல. 3, சலைப் புலவர் வீதி (புட்டுச்சந்தி), மணிக்கூடு றோட், யாழ்ப்பாணம் (43051)

எமது சங்கப்பண்ணையில் எரு விற்பனைக்கு உண்டு. விரும்புபவர்கள் எருவை பார்வையிட்டு கூறுவிலையினை 10-10-96 ஆம் திகதி 12 மணிக்கு முன் சமர்ப்பிக்கவும். பொதுமுகாமையாளர், யாழ் மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச்சங்கம், கலாசாலை வீதி, திருநெல்வேலி. (சி-3242)

நவராத்திரி பூசை விசேட நாள்களில் பால், தயிர் தேவையானவர்கள் முன்கூட்டியே எமது பால் விற்பனைக் கிளைகளில் தங்களது பெயரைப் பதிவு செய்து கொள்ளவும். பொதுமுகாமையாளர், யாழ்மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம், கலாசாலை வீதி, திருநெல்வேலி. (சி-3241)

### அக்கரைச் சீமையில்

இந்திய நாவல்களைத் தொடர்ந்து வாசிக்க அலுப்படிக்கவில்லையா? அராலியூர் ந. சுந்தரம்பிள்ளையின் அக்கரைச் சீமையில் ஓர் இலங்கை - இங்கிலாந்து நாவல். விலையும் மலிவுதான். ரூபா 25. பூபாலசிங்கம் புத்தகசாலை. (43008)

### தவறிவிட்டது

சின்னத்துரை பாலபரமேஸ்வரி (கோவில் வயல், இயக்கச்சி) ஆகிய எனது தேசிய அடையாள அட்டை தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து சி. பாலபரமேஸ்வரி, மே/பா செ மார்க்கண்டு, இத்தாவில், பளை எனும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும். (43055)

### வீடு வாடகைக்கு

சாவகச்சேரி - கண்டி வீதியில் (சாவகச்சேரி இந்துக் கல்லூரிக்கருகில்) சகல வசதிகளுடன் கூடிய வீடு வாடகைக்குண்டு. தொடர்பு இல; B; 23, கச்சாய் றோட், சாவகச்சேரி. (42999)

### சேவை

எல்லா விதமான தட்டச்சு வேலைகளும் செய்து தரப்படும். தொகையாக செய்பவர்களுக்கு விஷேட கழிவு உண்டு. B 418, சோலை அம்மன் வீதி, ஐயா கடையடி, மீசாலை. (42925)

---

## A/L 97, 98

கணக்கியல்

திரு. A [illegible]

B. Com (Hons)

Dip in - Ed.

எமது வழமையான பலவருட அனுபவம் வாய்ந்த ஆசிரியர்குழுவால்

**GCE (OL) 96**

**துரித மீட்டல் வகுப்புகள் ஆரம்பமாகின்றன.**

(பயிற்சிப் பரீட்சைகளுடன்)

மற்றும் ஆண்டுகள்

**5, 6, 7, 8, 9, 10, 11**

வகுப்புகளும் நடைபெறுகின்றன.

★ விசேட சித்திக்கு உத்தரவாதமளிக்கப்படும்.

**BRIGHT INSTITUTE**

10, Fletchers Lane,

Chundikuli.

(43040)

---

## றொபி, இனிப்பு தயாரிப்பாளர் கவனத்திற்கு!

எங்களிடம் லிக்குவிட் (LIQUID) குளுக்கோஸ் கைவசம் உள்ளது. தேவையானோர் எங்களிடம் தொடர்பு கொள்ளவும்.

தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி:

சிவா நறுமண பூங்கா

இல 288, ஆஸ்பத்திரி வீதி,

யாழ்ப்பாணம். (43009)

---

## வெள்ளி விழாக் காணும் ஆசிரியர்கள்

தங்கள் தன்னலமற்ற சேவையூடாக இருபத்தைந்து ஆண்டுகளைப் பூர்த்தி செய்து வெள்ளிவிழாக் காணும் பின்வரும் ஆசிரியப் பெருந்தகைகளை நலம் பெற்றுப் பல்லாண்டு வாழ வாழ்த்துகின்றோம்.

1. திரு. இ. பாலசுப்பிரமணியம்
2. திருமதி ச. சிற்றம்பலம்
3. திரு. ச. துரைவீரசிங்கம்
4. திரு. த. சௌந்தரபாண்டியன்

ஆசிரியர் கழகம்,

கொக்குவில் இந்துக் கல்லூரி.

(43056)

---

## நீங்கள் ஏன் அதிக கட்டணம் செலுத்த வேண்டும்?

★ நம்பிக்கையான சேவைக்கு

★ நாணயமான சேவைக்கு

**கறுப்பு வெள்ளைப் படங்களுக்கு**

## த ஸ்ருடியோவை

நாடுங்கள்.

★ நியாயமான கட்டணத்தில்

★ தரமான புகைப்படங்கள்

தேசிய அடையாள அட்டை ரூ. 35/- மட்டும்

விசேட அடையாள அட்டை ரூ 35/- மட்டும்

தபால் அ. அட்டை/பாஸ்போர்ப் $2\frac{1}{2} \times 2$ அளவுகள் ரூ. 75/- மட்டும்.

ஒரு நாள் சேவை 75/- மட்டுமே (3 பிரதிகள்)

பாடசாலை அதிபர்களின் கவனத்திற்கு: பாடசாலை அடையாள அட்டைகளுக்கு தங்கள் தங்கள் பாடசாலையிலேயே படமெடுத்துத் தரப்படும்.

2 பிரதிகள் ரூபா 35/- மட்டும்.

யாழ்ப்பாணம், நல்லூர் உதவி அரச அதிபர் பிரிவுகளுக்கென அங்கீகரிக்கப்பட்ட ஒரேயொரு புகைப்பட நிலையம்.

**த ஸ்ருடியோ**

பிரதான வீதி, யாழ்ப்பாணம்.

(சதோசவுக்கு அருகில்)

[43038

---

# முதலாம் வருட நினைவஞ்சலி



சரசாலை வடக்கு

## தம்பையா தாமோதரம்பிள்ளை

மண்ணில்: **17 – 10 – 1922**

விண்ணில்: **07 – 10 – 1995**

ஊரார் தாமோதரம்பிள்ளை என்பர்
அப்பா; உங்கள் அன்புக்கு
எவர் தாமோ தரம் எனக்காட்ட
எமை விட்டுப்பிரிந்தா விளக்கம் கொடுத்தீர்கள்
கொட்டுகிற கண்ணீர்;
குளிர் நிலவு, சூரியர்கள் எட்ட அகன்றாலும்
இறுதியடையாது.
சுட்டெரித்து விட்டாலும்
அன்புச் சுடர் உருவாய் விட்டகலா.
ஏக்கம் உங்களின் பிரிவாலே
வாடி வதங்கி வழிபார்த்து நிற்கின்றோம்.

மனைவி, பிள்ளைகள்,
சகோதரன், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

சரசாலை வடக்கு,
சாவகச்சேரி.

(43054)

---

# 31ஆம் நினைவு நாள்

07 – 10 – 1996



## செல்வி ஞானந்தி கணநாதன்

தந்தது: **29 – 08 – 1977**

எடுத்தது: **07 – 09 – 1996**

ஒரு நொடிப்பொழுதில் உன் மறைவு!
ஒவ்வொரு நொடிப்பொழுதும் உன் நினைவு!!

தத்தம் இயல்புக்கேற்ப எம் துயரில் பங்குகொண்ட அனைவரையும் என்றும் மறவோம்.

குடும்பத்தினர்.

348(144), கண்டி வீதி,
அரியாலை, யாழ்ப்பாணம்.

(சி/3237)

# யுத்தக் கைதிகளை விடுவிக்கக்கோரி ரத்வத்தைக்கு ரணில் கடிதம்

## ஆனால் அது சாத்தியம் இல்லையாம்

கொழும்பு, ஒக். 7

''சாகரவர்த்தனா'' கப்பலின் கப்டன் அஜித் போயாகொட உட்பட விடுதலைப் புலிகளின் பாதுகாப்பில் உள்ள 22 படையினரையும் யுத்தக் கைதிகள் பரிமாற்றத்தின் மூலம் விடுதலை செய்விப்பதற்கு முயற்சி எடுக்குமாறு பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் ஜெனரல் அனுருத்த ரத்வத்தையிடம் எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க கோரியிருக்கின்றார்.

விடுதலைப் புலிகளால் தடுத்து வைக்கப்பட்டுள்ள இந்த 22 படையினரும் கையெழுத்திட்டு எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்காவுக்கு அனுப்பி வைத்துள்ள கடிதம் ஒன்றில் —

அரசின் காவலில் உள்ள மூன்று விடுதலைப் புலிகளை வீடுவித்தால் புலிகள் தங்களை விடுதலை செய்வர் எனத் தெரிவித்திருந்தனர்.

இந்தக் கடிதம் தமக்குக் கிடைத்ததை அடுத்தே அது தொடர்பாக பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் ரத்வத்தைக்கு எதிர்க்கட்சித் தலைவர் இது தொடர்பாகக் கடிதம் ஒன்றை அனுப்பி வைத்தார்.

'புலிகளின் காவலில் உள்ள கைதிகள் எனக்கு எழுதியுள்ள கடிதம் உண்மையானால்— அதில் கூறப்பட்டுள்ள விடயங்கள் உண்மையானால்— அவர்களை விடுவிக்க மனிதாபிமான ரீதியில் நடவடிக்கை எடுக்குமாறு வேண்டுகிறேன், என்று ரணில் விக்கிரசிங்க தமது கடிதத்தில் கோரியுள்ளார்.

ஆனால் —

இக்கைதிகள் பரிமாற்றத்துக்கு அரசின் பாதுகாப்பில் உள்ள இரு பெண் போராளிகளையும், செனடி என்ற போராளியையும் விடுவிக்க் வேண்டும் என புலிகள் அமைப்புத் தெரிவித்துள்ளதாகவும் —

ஆனால் அந்தக் கைதிகள் விடுதலை பெற்று வடபகுதிக்குச் செல்ல விரும்பாமல் அதற்கு மறுத்து வருவதால் புலிகளின் காவலில் உள்ள கைதிகளை விடுவிக்க, வழி இல்லாமல் போயிருப்பதாகவும் — பிரதி பாதுகாப்பு அமைச்சர் தெரிவித்துள்ளார் என்று பி. பி. ஸியின் சிங்கள சேவை அறிவித்தது.

(உ- 3- 10- 150)

# அதர்மமான எச்சரிக்கை

யாழ்ப்பாணத்தில் இருந்து வெளிமாவட்டங்களுக்கு இடம்பெயர்ந்த சகல ஆசிரியர்களையும் மீண்டும் குடாநாட்டுக்குத் திரும்புமாறு கல்வி அமைச்சு கடிதம் அனுப்பி உள்ளது.

அவ்வாறு திரும்பி வராதவர்களுக்கு இந்த மாதச் சம்பளம் அவர்கள் இடம் பெயர்ந்திருக்கும் வெளிமாவட்டங்களில் வைத்து வழங்கப்படமாட்டாது. அதாவது இங்கே— யாழ்ப்பாணத்துக்கு — வந்தால் மட்டுமே சம்பளம் கிடைக்கும்!

கல்வி அமைச்சு இவ்வாறு அறிவித்த அதேவேளை —

குடாநாட்டில் இருந்து இடம்பெயர்ந்த அரச ஊழியர்களை உடனடியாக யாழ்ப்பாணம் திரும்புமாறு பொது நிர்வாக அமைச்சு கேட்டிருந்தது.

ஆனால் இந்த அறிவித்தல்கள், அறிவுறுத்தல்களுக்கு மேலாக, குடாநாட்டிலிருந்து இடம்பெயர்ந்து வெளிமாவட்டங்களில் உள்ள அரச உத்தியோகத்தர்களுக்கு இப்போது புதிதாக ஓர் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இம்மாத இறுதிக்குள் குடாநாட்டுக்குத் திரும்பாத அரச ஊழியர்களின் இடங்களுக்குப் புதியவர்கள் நியமிக்கப்படுவர் என்பதே அந்த எச்சரிக்கை!

பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் ரத்வத்தையின் தலைமையில் நடைபெற்ற அரச உயர் அதிகாரிகள் மாநாட்டில் மேற்கொள்ளப்பட்ட இந்த எச்சரிக்கையின் — முடிவின்— மறைமுக அர்த்தம் குறிப்பிட்ட தவணைக்குள் யாழ்ப்பாணம் திரும்பாத அரச ஊழியர்கள் பதவிகளில் இருந்து நீக்கப்படுவர் என்பதாகும்.

இடம் பெயர்ந்த அரச ஊழியர்கள் தமது தொழில் நிலையமான யாழ்ப்பாணத்துக்குத் திரும்பாததால், இங்குள்ள திணைக்களங்களால் மக்களுக்குரிய சேவைகளைச் சீராகவும் தாமதமின்றியும் செய்ய முடியாத நிலை உருவாகியிருக்கலாம்.

ஆனால், இடம் பெயர்ந்தவர்களை வேலை நிறுத்தக் காரர்களுக்குச் சமனாக்கி, வேலைக்குத் திரும்பக் கால அவகாசம் கொடுத்து, வேலை நீக்கம் செய்யப் போவதாக மிரட்டுவது சற்றும் மனிதாபிமானம் இல்லாத செய்கை.

யாழ்ப்பாணக் குடாநாட்டிலிருந்து இடம்பெயர்ந்தளர்களை, எந்த விதத்திலும், எந்தக் காரணம் கொண்டும் வேலைநிறுத்தக் காரர்களாகக் கருத முடியாது; கருதக் கூடாது.

அவர்கள் தமது சொந்த விருப்பத்தின் பேரிலோ அல்லது வசதி கருதியோ இடம் பெயரவில்லை. போரின் காரணமாகவே தமது சொந்த வீடு வாசல்களையும், தொழில் நிலையங்களையும் விட்டு விட்டு இடம்பெயர்ந்தார்கள். போரை நடத்தியதில், நடத்துவதில் அரசாங்கமும் ஒரு பிரதான பங்காளி.

எனவே இடம்பெயர்ந்த அரச ஊழியர் விடயத்தில் நியாயத்துடன், நீதியுடன் நடக்க வேண்டிய நடைமுறைப் பொறுப்பும், தார்மீகப் பொறுப்பும் சட்டரீதியான, ஜனநாயக அரசு என்ற வகையில் அரசுக்கு உண்டு.

இடம்பெயர்ந்துள்ள யாழ். அரச ஊழியர்கள் இங்கு திரும்புவதற்கு ஒழுங்கு சீரான போக்குவரத்து வசதிகளைச் செய்யாமல், ஒருமாத காலக் கெடு விதிப்பதும், அவர்களைப் பதவியிலிருந்து நீக்க முனைவதும் அதர்மமாகும்.

# அமைச்சர் வருகைக்காக காத்திருக்கும் சீருடை துணி

திருகோணமலை, ஒக். 7

யாழ். மாவட்டப் பாடசாலை மாணவர்களுக்கு என எடுத்து வரப்பட்டு யாழ்ப்பாணத்தில் மாணவர்களுக்கு விநியோகிக்கப்படாமல் வைக்கப்பட்டிருக்கும் சீருடைத் துணிகளை உடனடியாக மாணவர்களுக்கு விநியோகிக்கும்படி உத்தரவிடப்பட்டிருக்கின்றது.

இச் சீருடைத் துணிகள் எடுத்து வரப்பட்டு சுமார் நான்கு மாதங்களாக யாழ். கல்வித் திணைக்களத்தினால் பாடசாலை ஒன்றில் வைக்கப்பட்டுள்ளது.

கல்வி, உயர் கல்வி அமைச்சர் யாழ்ப்பாணம் வருவார் என்றும்—

அப்போது சீருடைத்துணிகளை மாணவருக்கு விநியோகிக்கும் வைபவ ரீதியான நிகழ்வு இடம் பெறும் என்றும்—

அதன் பின்னரே சகல பாடசாலை மாணவர்களுக்குமான சீருடை விநியோகம் மேற்கொள்ளப்படும் என்றும்—

சம்பந்தப்பட்ட வட்டாரங்களில் தெரிவிக்கப்பட்டு வந்தது.

ஆனால் தற்போது கல்வி அமைச்சர் உடனடியாக யாழ். வரக்கூடிய வாய்ப்பு இல்லாத நிலை இருப்பதால்—

தேங்கி கறையானுக்கு இரையாகும் நிலையில் இருக்கும் சீருடைத் துணிகளை உடனடியாக மாணவருக்கு விநியோகிக்கும்படி உத்தரவிடப்பட்டிருப்பதாக அறியவந்தது.

(உ-150)

# புதிய பல்கலைக்கழகம் புத்தளத்தில் அமையும்

கொழும்பு, ஒக்.7

வட - மேல் மாகாணத்தில் புதிய பல்கலைக்கழகம் ஒன்று இவ்வருட இறுதிக்குள் அமைக்கப்படவிருக்கின்றது

இது தொடர்பாக சிலாபத்தில் நடந்த கூட்டத்தில் கலந்து கொண்ட கல்வி, உயர்கல்வி அமைச்சர் றிச்சர்ட் பத்திரான, புத்தளம் மாவட்டத்தில் இந்தப் பல்கலைக்கழகம் அமையும் ான்று தெரிவித்தார்.

அதேவேளை —

ஜி.சீ.ஈ (உயர்தர) வகுப்பு மாணவர்களுக்கு இருவாரப் பயிற்சி ஆஸ்பத்திரி, ஹோட்டல், தொழில் நிறுவனங்கள் போன்றவற்றில் வழங்கப்பட திட்டம் ஒன்று அடுத்த வருடம் நடைமுறைக்கு வரும் என்றும் அமைச்சர் குறிப்பிட்டார்.

(உ-3)

# யாழ். பாடசாலைகளுக்கு ஒருகோடிரூபா ஒதுக்கீடு!

திருகோணமலை, ஒக் 7

யாழ். மாவட்டப் பாடசாலைகளில் கட்டடப் பணிகளை மேற்கொள்ளவும், அப்பாடசாலைகளுக்கு உபகரணங்களை வழங்கவும் சுமார் ஒரு கோடி ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டிருப்பதாக தெரியவருகின்றது.

நீர்ப்பாசன, மின்சக்தி, எரிபொருள் அமைச்சரும், பாதுகாப்புப் பிரதி அமைச்சருமான ஜெனரல் அனுருத்த ரத்வத்தை தலைமையில் அண்மையில் நடைபெற்ற யாழ். மாவட்ட புனர்வாழ்வு, புனரமைப்புத் தொடர்பான — உயர்மட்ட மாநாட்டில் இந்த ஒதுக்கீடு சம்பந்தமாக முடிவு செய்யப்பட்டிருக்கின்றது.

கட்டட வேலைகளுக்கு 76 இலட்சம் ரூபாவும், உபகரணக் கொள்வனவுக்கு 25 இலட்சம் ரூபாவும் ஒதுக்கப்படும்.

இதே வேளை —

யாழ். மாவட்டப் பாடசாலைகளில் அவசரத் திருத்த வேலைகளை மேற்கொள்வதற்காக பத்து இலட்சம் ரூபா உடனடியாக ஒதுக்கீடு செய்யப்பட்டிருப்பதாக வடக்கு கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் திரு. சு. டிவகலாலா தெரிவித்திருக்கின்றார்.

(உ-150)

## நாளை

புரட்டாதி 22

செவ்வாய்க்கிழமை

திதி: ஏகாதசி

பிற்பகல் 2.50 வரை.

நட்சத்திரம்: ஆயிலியம்

காலை 8.32 வரை.

ராகுகாலம்: 3.02—4.32

சுப நேரம்: 10.32—12.02

ஏகாதசி விரத நாள்

(பகலுக்கும் இரவுக்கும் பழைய நேரப்படி)

## கூட்டம்

யாழ் பல்கலைக்கழக நுண்கலைத் துறையின் சகல ஆண்டு மாணவர்களுக்கான கூட்டம் ஒன்று இன்று காலை 11 மணிக்கு (பழைய நேரம்) அறிமுக மண்டபத்தில் நடைபெறவிருக்கிறது.

# மேஜர் ஜெனரல் செனவிரத்ன ஓய்வு பெறுவார்

இராணுவ அதிகாரிகளின் பிரதம அலுவலர் பதவியில் தற்போது கடமையாற்றி வரும் மேஜர் ஜெனரல் ஏ. யூ. எம் செனிவிரத்ன எதிர்வரும் டிசம்பர் மாதம் ஒய்வு பெறுகின்றார்.

அவரது இடத்துக்கு மேஜர் ஜெனரல் சோமதாஸ ஹப்பு ஆராய்ச்சி நியமிக்கப்படுவார் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இராணுவத்தளபதிக்கு அடுத்த தரத்தில் உள்ள பதவி இதுவாகும். (உ-150)

# தமிழ்த் திறன் போட்டிகள்

தென்மராட்சிக் கல்விக் கோட்டத்திற்குட்பட்ட பாடசாலை மாணவர்களுக்கிடையேயான தமிழ்மொழித் திறன் போட்டிகள் வரும் வியாழக்கிழமை காலை 8.30 மணி முதல் சாவகச்சேரி மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளதாக தென்மராட்சிக் கல்விக்கோட்ட கல்விப் பணிப்பாளர் இ. கணேசன் தெரிவித்தார்.

(உ-31)

# மரண விசாரணை அதிகாரி; பல பிரிவுகளில் இல்லை

யாழ்ப்பாணக் குடாநாட்டின் பெரும்பாலான பகுதிகளில் திடீர் மரணவிசாரணை அதிகாரிகள் இல்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த 10 வருடங்களுக்கு மேலாக இங்கு சரியான அரச நிர்வாகம் இல்லாததனால் வெற்றிடங்கள் நிரப்பப்படாமல் இந்நிலைதோன்றியுள்ளது.

சில தினங்களுக்கு முன் உடுவில் கிழக்கைச் சேர்ந்த சண்முகநாதன் சிவகுமார் என்ற 23 வயது இளைஞர் தட்டாதெருச் சந்தியில் நடந்த அசம்பாவிதத்தின் போது அகால மரணமடைந்தார். அவரது சடலத்தை உறவினர்கள் வெகு சிரமத்தின் மத்தியில் உடுவிலுக்கு எடுத்து வந்தனர்.

சட்ட நடைமுறையின் படி யாழ். போதனா வைத்தியசாலைக்கு சடலத்தைக் கொண்டு சென்று ஒப்படைத்து மரண விசாரணையின் பின்பே வீட்டுற்கு எடுத்துச் செல்ல வேண்டும் எனினும் அப்போதைய சூழ்நிலை அதற்கு இடமளிக்கவில்லை.

ஆகவே வீட்டிற்கு திடீர் மரண விசாரணை அதிகாரியை அழைத்து வந்து அவருடைய விசாரணை அறிக்கையைப் பெற உத்தேசித்த உறவினர்கள், அம்முயற்சியில் ஈடுபட்டபோது தான் உடுவில் உதவி அரச அதிபர் பிரிவில் திடீர் மரண விசாரணை அதிகாரிகள் எவரும் செயற்படவில்லை என்பது தெரிய வந்தது. கோப்பாய் பிரிவு உட்பட வேறு பல பிரிவுகளிலும் இதே நிலைதான் நிலவுகிறது.

இப்பகுதியில் கடமையாற்றியவர்கள் ஒன்றில் இறந்து விட்டனர்; அல்லது வெளிநாடு சென்று விட்டனர். இவ் வெற்றிடங்களை நிரப்ப ஏற்பாடு செய்யப்படாமையினால் பொதுமக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். (உ-154)

## அமைச்சரவை...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

வியை ஏற்பர் என்பது இன்னும் தெளிவாகவில்லை.

அமைச்சர் பதவியேற்க தேவானந்தா இணங்கினாரானால் அவருக்குப் பதவி வழங்குவதற்காகச் செய்யப்படும் அமைச்சரவை மாற்றத்தின் போது, மேலும் பல மாற்றங்களை ஜனாதிபதி செய்வார் என எதிர்பார்க்கப்படுகின்றது. அதன்படி—

தற்போது இரண்டுக்கும் அதிக அமைச்சர்களை வைத்திருக்கும் பிரமுகர்களிடமிருந்து மேலதிக அமைச்சர்கள் நீக்கப்படுவர் ஐந்து அல்லது ஆறு புதிய முகங்கள் அமைச்சரவையில் சேர்க்கப்படுவர்.

டக்ளஸ் தேவானந்தாவுக்கு அமைச்சர் பதவி கொடுத்தால்—

இ. தொ. காவின் எம். பிக்களான தேவராஜுக்கு அமைச்சர் பதவியும், தமது பேரனான ஆறுமுகம் தொண்டமானுக்கு பிரதி அமைச்சர் பதவியும் வழங்குமாறு இ. தொ. க. தலைவர் தொண்டமான் வற்புறுத்துவார் என்று தெரிகின்றது.

ஆறுமுகம் தொண்டமானுக்கு முழு அமைச்சர் பதவி வழங்க வேண்டும் என அரசை வலியுறுத்துவதற்கு தொண்டமான் விரும்புகின்ற போதிலும்—

கட்சிக்குள் குறுக்கு வழியில் ஆறுமுகம் தொண்டமான் முன்னணிக்கு வருவதை சதாசிவம், சிவலிங்கம், சென்னன் போன்றோர் கடுமையாக எதிர்ப்பதால், தொண்டமான் அதனை இப்போதைக்குத் தவிர்ப்பதாகத் தெரிகின்றது.

—இவ்வாறு கொழும்புத் தகவல்கள் மேலும் தெரிவித்தன,

(உ-150)

## இ.தொ.கா.வும்...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

– இத்தகைய ஒரு கருத்து தென்னிலங்கை அரசியல் கட்சிகளிடையே வலுத்து வருவதாகக் கொழும்பு ஆங்கில வார இதழ் ஒன்றில் அதன் அரசியல் செய்தியாளர் தெரிவித்திருக்கின்றார்.

அமைச்சரவையில் இடம் பெற்றிருக்கும் இ. தொ. கா. தலைவர் தொண்டமானோ அல்லது கூட்டணிப் பிரமுகர்களோ விடுதலைப் புலிகளுடன் உத்தியோகபூர்வ ரீதியில் பேச்சு நடத்தினால் அதனை சந்திரிகா அரசு ஆட்சேபிக்க மாட்டாது என்றும் அப்பத்திரிகையின் அரசியல் விமர்சகர் தெரிவித்தார்.

(உ-150)

# மரண அறிவித்தல்கள்

## திருமதி பொன்னுத்துரை பராசக்தி

மூத்தவிநாயகர் வீதி, நல்லூரைப் பிறப்பிடமாகக் கொண்ட பராசக்தி 6-10-96 இல் காலமாகி விட்டார்.
அன்னார் க. பொன்னுத்துரையின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான வைத்திலிங்கம் தில்லையம்மா தம்பதிகளின் அன்பு மகளும், திருமதி கனகரத்தினம் மகேஸ்வரியின் அன்புச் சகோதரியும், கிருஷ்ணகுமாரி, காந்திமதி, செல்வராணி, கேதீஸ்வரன் (வர்த்தகர்), கௌரிதேவி (சுவிஸ்), விக்கினேஸ்வரி, றோகினி ஆகியோரின் பாசமிகு தாயாரும், தனபாலசிங்கம் (வர்த்தகர்), விஜயரத்தினம் (லாண்ட்மாஸ்ரர் உரிமையாளர்), நீதிராஜா (வர்த்தகர்), பாலசுப்பிரமணியம் (சுவிஸ்) செல்வகுமாரி (கொக்குவில்) ஆகியோரின் பாசமிகு மாமியாரும் வசந்தரூபன், சிவரஜனி, சிவரூபி, ஜெனனி, ஸ்ரீகாந்தன், ஸ்ரீபதி, ஐங்கரன், குகன், கஹிகரன், டிசாந்தினி, லிண்டன், சாளினி, யதீசன், நிரோஜன், ஆகியோரின் பேர்த்தியுமாவார்.
அன்னாரின் பூதவுடல் 419, கோவில் வீதி, நல்லூரில் இருந்து இன்று[7 - 10 - 96] திங்கள் காலை 10 மணிக்கு தகனக்கிரியைக்காக திருநெல்வேலி செம்பாடு மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார் உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்·
பொ. கேதீஸ்வரன் (மகன்)

(43062)

## அம்பலம் சின்னத்தம்பி

(முன்னாள் ஆசிரியர், சோமஸ்கந்தா, கல்லூரி-புத்தூர்)

வாதாரவத்தையை பிறப்பிடமாகவும், உடுப்பிட்டியில் வசித்தவருமான அம்பலம் சின்னத்தம்பி (இளைப்பாறிய அதிபர் சைவப்பிரகாச, வித்தியாலயம் உடுப்பிட்டி ) 4 - 10 - 96 வெள்ளிக்கிழமை சிவபதமடைந்தார்.
அன்னார் பவளராணியின் அன்புக் கணவராவார்.
அன்னாரின் ஈமக்கிரியைகள் மறுநாள் நடைபெற்று பூதவுடல் முள்ளிமயானத்தில் தகனம் செய்யப்பட்டது.
இவ்வறிவித்தலை உறவினர்கள், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
ந. சத்தியமூர்த்தி

சந்தனத்தெரு,
உடுப்பிட்டி.

(43063)

## நமசிவாயம் குழந்தைவேலு

(ஓய்வு பெற்ற நெசவு மேற்பார்வையாளர்)

கம்பசிட்டி, பருத்தித்துறையைப் பிறப்பிடமாகவும், கோப்பாய் வடக்கு, பூதர்மடத்தை வசிப்பிடமாகவும் கொண்ட நமசிவாயம் குழந்தைவேலு 05-10 96 சனிக்கிழமை காலை காலமானார்.
அன்னார் வள்ளிப்பிள்ளை (ஓய்வு பெற்ற கைப்பணி ஆசிரியர்)யின் அன்புக் கணவரும், செல்வராணி (ஆஸ்திரேலியா), இந்துமதி (பிரான்ஸ்), கிரிதரன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும், தெய்வேந்திரன் (ஆஸ்திரேலியா), ஸ்ரீதரன் (பிரான்ஸ்), சுபாஞ்சலி (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமனாரும், மயூரன், மதுரா, (ஆஸ்திரேலியா) ராஜாஜி, நேதாஜி, பிரசாந்தி, கௌதமன், சந்தியா ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.
அன்னாரின் இறுதிக் கிரியைகள் 05-10 96 சனிக்கிழமை நடைபெற்றன. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
கு. வள்ளிப்பிள்ளை
(மனைவி)

பூதர்மடத்தடி,
கோப்பாய் வடக்கு,
கோப்பாய்.

(43067)

## ஸ்டீபன் றொட்றிகஸ்

(ஓய்வு பெற்ற உத்தியோகத்தர் / O A தேசிய உப்புக் கூட்டுத்தாபனம்)

யாழ்ப்பாணம் ஸ்டீபன் றொட்றிகஸ் 05.10 96 இரவு 7.15 மணிக்கு காலமானார்.
அன்னார் சிசிலியாவின் அன்புக் கணவரும், திருமதி பி. சந்திரன் (யாழ். போதனா வைத்தியசாலை), வைற்றஸ் (லங்கா சோல்ட் லிமிட்டட்), திருமதி E. சவுந்தரம் (தொழில் நுட்பக் கல்லூரி ஆங்கில விரிவுரையாளர்), திருமதி C. சண்முகநாதன் (ஆசிரியை விக்டோரியா கல்லூரி), திருமதி A. றொக்ஸி (கொழும்பு), திருமதி C. ராமகிருஸ்ணன் (ஆசிரியை, சம்பத்திரிசியார் கல்லூரி), செல்வி கில்டா (ஆசிரியை, சுண்டுக்குளி மகளிர் கல்லூரி), செல்வி மல்லிகா (யாழ். செயலகம்) ஆகியோரின் அன்புத் தந்தையும், அருட்சகோதரி மேரி மெலானி, காலஞ்சென்ற அருட்சகோதரி மேரி அடலாவினதும் அன்புச் சகோதரனும், சந்திரன் (கொழும்பு), திருமதி வரதலட்சுமி வைற்றஸ் (லங்கா சோல்ட் லிமிட்டட்), சவுந்தரம் (கொழும்பு), சண்முகநாதன் (யாழ் செயலகம்), றொக்ஸி (கொழும்பு), ஆகியோரின் மாமனுமாவார்.
அன்னாரின் பூதவுடல் நல்லடக்கத்துக்காக 6.10 96 இல் புனித கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்பட்டது. இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

தகவல்:
வைற்றஸ்
(மகன்)

இல. 9, வேலப்பர் லேன்,
கனகரத்தினம் வீதி,
அரியாலை.

(43069)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட்டினரால் யாழ்ப்பாணம், நாவலர் வீதி, 292/2 இலக்கத்திலுள்ள அவர்களதுபணிமனையில் 07-10-1996 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

## குண்டு வீச்சு!

கொழும்பு, ஒக். 7
மட்டக்களப்பு மாவட்டம் ஆரைப்பத்தையில் சந்தைக்கு முன்னால் நேற்று முன்தினம் காலை 7.30 மணியாளவில் இடம்பெற்ற குண்டு வீச்சுச் சம்பவத்தில் பொது மகன் ஒருவர் காயமடைந்தார். (உ-3)

டக்ளஸுக்கு...
(4ஆம் பக்கத் தொடர்ச்சி)
வித்தது.

### டக்ளஸ் கருத்து

அதே சமயம் நேற்றுக் கொழும்பில் வெளியான ஆங்கில வார இதழ்களுக்கு இந்த விடயம் குறித்து திரு. தேவானந்தா பேட்டியளித்தார். அவற்றுக்கு அவர் கூறியதாவது:-
"அமைச்சராவதானால் நான் பொதுமக்கள் ஐக்கிய முன்னணியில் இணைய வேண்டியதில்லை. எனது கட்சி பொதுமக்கள் ஐக்கிய முன்னணியில் இணையாமலேயே என்னை அமைச்சராக்க முடியும். தொண்டமானை பொதுமக்கள் ஐக்கிய முன்னணியில் சேர்த்துக் கொண்டுதானா அவருக்கு அமைச்சர் பதவி வழங்கினார்கள்?
எது, எப்படியானாலும் தமிழர்களுக்கு உரிய தீர்வு கிடைப்பதுதான் முக்கியம்.
கேள்வி:- மக்களின் உடனடிப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு அரசுக்கு மூன்று மாத கால அவகாசத்தை நீங்கள் வழங்கியிருப்பதாகக் கூறப்படுகின்றதே?
பதில்:- குறிப்பிட்ட காலக்கெடு என்று எதுவும் விதிக்கவில்லை. ஆனால் அதற்கு நடவடிக்கை எடுப்பது அவசியம்.
கேள்வி:- இடைக்கால நிர்வாகம் குறித்து ...?
பதில்:- இடைக்கால நிர்வாகம் ஏற்படுத்தப்பட வேண்டும் என்பதை ஜனாதிபதியும் ஒப்புக் கொள்கின்றார். ஆனால் அதற்குத் தற்போது தமக்குச் சில முட்டுக்கட்டைகள் இருப்பதாகச் சொல்கின்றார். ஆனால் அவை எவை என்று அவர் வெளிப்படுத்தவில்லை.
கேள்வி:- இடைக்கால சபைக்கு யார் தலைமை வகிக்க வேண்டும்?
பதில்:- அதனைப் பிரதேச மக்களே தெரிவு செய்யட்டும்; தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் பிரதிநிதிகள் மத்தியிலிருந்து தலைவரைத் தெரிவு செய்யலாம்.
அரசமைப்பின் 154 (எல்) பிரிவின் கீழ் வடக்கு - கிழக்கு நிர்வாகத்தை இடைக்கால சபை ஒன்றிடம் கையளிக்க ஜனாதிபதிக்கு அதிகாரம் உண்டு.

### மூன்றாம் தரப்பு யார்?

கேள்வி:- புலிகள் — அரசுப் பேச்சுக்கு மூன்றாம் தரப்பு மத்தியஸ்தராக யாரை விரும்புகின்றீர்கள்?
பதில்:- இந்தியா மத்தியஸ்தராக இருக்கலாம். ஆனால் இருந்தும் என்ன பேசுவது?
விடுதலைப் புலிகள் தேர்தலுக்கோ— ஜனநாயக நீரோட்டத்துக்கோ — வரமாட்டார்கள். அதற்கு அவர்களுக்கு திராணி இல்லை. அவர்கள் ஆயுதங்களைக் கைவிடப் போவதில்லை.
பிரபாகரனுக்கு சர்வாதிகாரம் நடத்துவதற்கு நிலம் தேவை. அதற்காக அவர் இறக்கும் வரை யுத்தம் நடத்தவே விரும்புகின்றார்.
இனப்பிரச்சினை விடயத்தில் பிரதான சிங்களக் கட்சிகளான பொதுமக்கள் ஐக்கிய முன்னணியும், ஐ. தே. கவும் கருத்துடன்பாடு காண்பது அவசியம். அவை தங்களுக்குள் இணங்கி நியாயமான தீர்வு ஒன்றைத் தமிழர்களுக்கு முன்வைத்தால் தமிழர்கள் அதை நிச்சயமாக ஏற்பார்கள். அதை விடுதலைப் புலிகள் ஏற்காவிட்டால் புலிகளை நிராகரித்து புறம் தள்ளவும் தமிழ் மக்கள் பின் நிற்கமாட்டார்கள்.
— என்றார். (உ-3-150)

## தூதர் மங்கள முனசிங்க தக்கரேயைச் சந்தித்தார்

இலங்கைத் தமிழர்களின் விடுதலைப்போராட்டத்துக்கு ஆதரவாகக் கருத்து வெளியிட்டு வரும் மகாராஷ்டிரத்தின் சிவசேனைத் தலைவரை, இந்தியாவுக்கான இலங்கைத் தூதர் மங்கள முனசிங்க நேரில் போய் சந்தித்துப் பேசினார்.
இலங்கைத் தமிழர்களின் ஆயுதப் போராட்டத்துக்கு தக்கரே ஆதரவு தெரிவித்து வருவதால், நிலைமையைத் தெளிவுபடுத்துவதற்காக இலங்கைத் தூதர் அவரை நேரில் சென்று சந்தித்தார் என கொழும்பில் தெரிவிக்கப் பட்டது.
யாழ்ப்பாணம் மீதான தாக்குதல் குறைந்த பொதுமக்கள் இழப்புகளுடனேயே நடந்தது என்று இச் சந்திப்பின் போது இலங்கைத் தூதுவர் தெரிவித்ததாகவும் கூறப்பட்டது. (உ-3)

## கிழக்கில் மோதல்

கொழும்பு, ஒக். 7
மட்டக்களப்பு மாவட்டம் பேய்த்தாளையில் கடந்த வெள்ளியன்று படையினர் நிலக்கண்ணி வெடி ஒன்றைக் கண்டுபிடித்ததை அடுத்து, அப்பகுதியில் தேடுதல் மேற்கொண்டதாகவும் —
அப்போது படையினருக்கும், புலிகளுக்கும் இடையில் துப்பாக்கி மோதல் இடம் பெற்றதாகவும் அறிவிக்கப் படுகின்றது.
இச்சூடுகளுக்கு இடையில் அகப்பட்டு பெண் ஒருவர் உயிரிழந்ததாகவும் தெரிவிக்கப்பட்டது. (உ-3)

ஆயுதங்கள் .
(1ஆம் பக்கத் தொடர்ச்சி)
தனைகளை அவர்கள் ஏற்றுக் கொண்டால் மட்டுமே அவர்களுடன் நாம் பேச்சுவார்த்தை நடத்துவோம்'' — என்று அவர்களிடம் தெரிவித்தாக அப்பத்திரிகைகள் குறிப்பிட்டுள்ளன.
சமாதான நடவடிக்கைகளுக்கு விரோதமாக புலிகள் செயற்படும் வரை எப்படி அவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்த முடியும்?
புலிகள் ஆயுதங்களை கீழே வைக்க முன்வர வேண்டும்; ஒரு குறிப்பிட்ட காலவரையறைக்குள் பேச்சுவார்த்தை மூலம் சமாதானத்தை ஏற்படுத்த உறுதியளிக்க வேண்டும். அப்போதுதான் அவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தப்படும். — என்று பத்திரிகை ஆசிரியர்களிடம் ஜெனரல் ரத்வத்தை மேலும் கூறியதாகத் தெரிவிக்கப்பட்டது. (உ-3)

## சைவப் புலவர் பரீட்சை

அகில இலங்கைச் சைவப் புலவர் சங்கத்தால் நடத்தப்படும் சைவப் புலவர் பரீட்சை அடுத்த ஆண்டு ஏப்பிரல் மாத இறுதி வாரத்தில் இடம்பெறும். விண்ணப்ப முடிவு தினம் ஒக்டோபர் 15 ஆம் திகதியாகும். (உ-3)

பாதுகாப்பு..
(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)
பொலீஸ் வட்டாரங்களை மேற்கோள்காட்டி ஏஜென்சிச் செய்திகள் வெளியிட்ட தகவல்களில்—
சந்தேகத்துக்குரிய நபர்களைக் கண்டுபிடிப்பதற்கு, தகவல்களைத் தந்துதவுமாறு பொதுமக்களிடம் வேண்டுகோள் விடுக்கப்பட்டிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.
குறிப்பாக, தத்தமது பகுதிகளில் புதிதாக நடமாடுவோர் குறித்த தகவல்களை உடனுக்குடன் பொலீஸாருக்குத் தெரிவிக்குமாறும் கேட்கப்பட்டுள்ளதாம் (அ-3)

மிதிவெடிகளை.
(1ஆம் பக்கத் தொடர்ச்சி)
அவற்றைத் தயார்செய்வதை தடை செய்யவும் கோரும் சர்வதேச மாநாடுகளை ஐ. நா. சபை நடத்திவருவது குறிப்பிடத்தக்கது
(உ-150)

## 31ஆம் நாள் நினைவஞ்சலி

### செல்வி ஞானந்தி கணநாதன்

எமது பீட சக மாணவி க. ஆனந்தியினுடைய சகோதரி செல்வி ஞானந்தி கணநாதன் அவர்களுடைய திடீர் மறைவையொட்டி அதிர்ச்சி அடைவதோடு அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவிக்கும் இந் நாளில் அவரின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.

1 ஆம் வருட இராமநாதன் நுண்கலைப்பீட
மாணவ, மாணவிகள்.

(43064)

## மரண அறிவித்தல்

### மார்க்கண்டு சங்கரலிங்கம்

இணுவிலைப் பிறப்பிடமாகவும், கொக்குவில் மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட மார்க்கண்டு சங்கரலிங்கம் (சாமியார்) 6 - 10 - 1996 ஆம் திகதி சிவபதம் அடைந்துவிட்டார்.
இவர் காலஞ்சென்ற மார்க்கண்டு - சின்னம்மா தம்பதிகளின் அன்பு மகனும், மகேஸ்வரியின் அன்புக் கணவரும், சோதிலிங்கத்தின் அன்புத் தந்தையும், தனலட்சுமியின் (டென்மார்க்) அன்பு மாமனும், சுசிதரன், சசிந்தன் (டென்மார்க்) ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.
அன்னாரின் பூதவுடல் இன்று (07 - 10 - 1996) திங்கட்கிழமை காலை 10 மணிக்கு அன்னாரின் இல்லத்திலிருந்து எடுத்துச் செல்லப்பட்டு கோம்பயன் மணல் மயானத்தில் தகனம் செய்யப்படும்.
இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
ச மகேஸ்வரி
(மனைவி)

சிவகுரு லேன்,
கொக்குவில் மேற்கு,
கொக்குவில்.

(43066)

மேலும் மரண அறிவித்தல்கள்
2 ஆம் பக்கத்தில்